RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 19 ஆகஸ்ட் 2022 இதழ்:- 17

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் எல்லை மீறினால் மீண்டும் தடை!

தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள புலம் பெயர் தமிழ் அமைப்புகள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவை மீண்டும் தடைப் பட்டியலில் சேர்க்கப்படும் என்று ஆளுங் கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு, அக்கட்சியின் தலைமையகத்தில் புதன்கிழமை 17 ஆகஸ்ட் 2022 நடைபெற்றது. (20ம் பக்கம் பார்க்க)

# 24ம் திகதி கோத்தா நாடு திரும்புகிறார்?

தாய்லாந்தில் தங்கியுள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24 ஆம் திகதி நாடு திரும்ப வுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. ராஜபக்ஷ குடும்பத்தின் நெருங்கிய உறவினரும் மிக் விமானக் கொள்வனவு மோசடியில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளவரும் ரஷ்யாவுக்கான முன்னாள்தூதுவருமான உதயங்க வீரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார். தென்னிலங்கை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்குமபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். மக்கள் எழுச்சியை எதிர்கொள்ள முடியாமல் கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறி இறுதியாக தாய்லாந்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இவர்களுக்காக 23 ஒக்டோபர் 2022 இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்



## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

18 Years Real Estate Experience

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence / Morningside

**Scarborough** $508,000
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route


### Sheppard & Warden

**Oshawa** $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Fully Renovated Suite

### Kennedy /Progress

**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location

### Hurontario/Hillcrest

**Mississauga** $599,900
Bedrooms: 2+1 Washrooms: 1
Renovated Washroom


### 40 New Delhi Dr

**Markham** $599,999
2 Floor Commercial Unit With 2
Washrooms & Separate Entrances


### Markham & Eglinton

**Scarborough** $589,900
Bedrooms: 2 Washrooms: 2
Steps To All Amenities; Schools

### King St West/John St

**Toronto** $679,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept, 9 Ft Ceilings

### William St N & Elgin St

**Kawartha Lakes** $799,900
Bedrooms: 6 Washrooms: 3
Attention Investors!

### Highway 535/Island Rd

**Sudbury** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 2
The Waterfront Property

### Church St/Rossland Rd


**Ajax** $999,949
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Luxury Townhome

### Conlin Rd & Simcoe St

**Oshawa** $1,139,000
Bedrooms: 3+2 Washrooms: 4
Sep/Entrance To A Finished Bsmt

### Pharmacy/Lawrence

**Scarborough** $1,219,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Separate Entrance To Basement

### Donald Cousens / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### 401 & Mccowan

**Scarborough** $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Minutes To 401, STC, Go Station

### Edenbrookhill / Sandalwood
FOR LEASE

**Brampton** $1,800
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Midland & Danforth
FOR LEASE

**Scarborough** $1,600
Bedrooms: 2 Washrooms: 1
Basement for rent, Just Renovated

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# சந்தர்ப்பங்களை நழுவ விடும் நிலைப்பாட்டில் மாற்றம் தேவை

உலகத் தமிழர் பேரவை உட்பட ஆறு புலம்பெயர் அமைப்பு கள் மற்றும் 316 தனிநபர்கள்மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நீக்கி யுள்ளது. இதனை உத்தியோகபூர்வமாக வர்த்தமானி அறிவித் தல் மூலமாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கமே புலம்பெயர்ந்த அமைப்புகள் மீதான தடைகளை அறிவித்திரு ந்தது. வடக்கு – கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாசை களை சர்வதேச ரீதியாக ஒடுக்கும் விதத்திலேயே கோட்டாபய அரசு புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள்மீதான தடையைக் கொண்டு வந்திருந்தது.

இருந்த போதிலும் ஜனநாயக ரீதியாக மேம்பட்ட நாடுகள் பலவற்றிலும் இயங்கிய இலங்கையின் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கு கோட்டாபய அரசு கொண்டு வந்திருந்த தடைகள் மூலமாக எந்தவொரு பாதிப்பும் சர்வதேச ரீதியாக ஏற்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசு சில புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்கியுள்ளமையை எடுத்த எடுப்பிலேயே தவறாக விமர்சிக்காது சாதகமாகப் பரிசீலிப்பதே ஏற்புடையதாக இருக்கும்.

உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தமது அமைப்பு உட்பட சில புலம்பெயர் தமிழர் அமைப்பு கள் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசு நீக்கியுள்ளமை குறித்து வெளியிட்டுள்ள அபிப்பிராயம் எவ் விதத்திலும் ஓர் அரசியல் சாணக்கியமுடையதாகக் காணப் படவில்லை. ஏனெனில், ஓர் அரசியல் ரீதியான அணுகுமுறை க்கு சந்தர்ப்பம் கிடைக்குமானால் அதுகுறித்து பரிசீலித்து களத்தில் இறங்கி தமிழர் அபிலாசைகள் குறித்த கருத்துக் கண்ணோட்டங்களை முன்வைப்பதே ஓர் ஆரோக்கியமான நடவடிக்கையாக இருக்க முடியும். இதைவிடுத்து கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களை தவறவிட முனைவது நல்ல முடிவு களுக்கு வழியமைத்து விடாது.

புலம்பெயர்ந்த சில தமிழ் அமைப்புகள் சர்வதேச ரீதியாக இலங்கை மீது வழங்கி வருகின்ற அழுத்தங்களில் இருந்து விடுபடவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவற்றின் மீதான தடையை நீக்கியுள்ளதோடு சமரச முயற்சிகளுக்கான ஒரு திறவுகோலாகவும் புலம்பெயர்ந்த அமைப்புகள் மீதான தடை நீக்கத்தை கருத முடியும். கடந்த காலங்களில் அரிய பல சமரச முயற்சிகள் முறிவடைந்து தோல்வி கண்டதோடு பாரிய பின்னடைவுகளை தமிழ் அரசியல் தரப்பு எதிர்நோக்கியமை க்கும் சந்தேகங்களும், நம்பிக்கையீனங்களுமே முக்கிய காரணங்களாகும். எனவே, கடந்த காலங்களில் விட்ட

தவறுகளையே மீளவும் விடுவதற்கான சூழ்நிலையை உரு வாக்குவது போன்றதாகவே உலக தமிழர் பேரவை பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்த கருத்துக்கள் விளங்குகின்றன.

ரணில் விக்கிரமசிங்க தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக விளங்குகின்றார். இந்நிலையில், அவர் வழங்குகின்ற சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தி தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறை வேற்றமுடியும். இல்லையேல் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை அவர் முன்னெடுப்பதற்கு பின்வாங்குகின்ற விடய ங்கள் தொடர்பாகவும் வடக்கு – கிழக்கு தமிழர்களுக்கு அவர் தர மறுக்கின்ற உரிமைகள் குறித்தும் சர்வதேச சமூகத்தின் முன்பாக புலம்பெயர்ந்த அமைப்புகளால் தகுந்த முறையில் வெளிப்படுத்த முடியும்.

இதைவிடுத்து, ஜெனிவாவில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொட ரையும் சர்வதேச சமூகத்தையும் சமாளிக்கவே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்கியுள்ளார் எனக் குறிப்பிடுவது எவ்விதத்திலும் குறிப்பிடத்தக்க கருத்தாக இருக்க முடியாது.

நிச்சயமாக ஜெனிவாவில் இடம்பெறவுள்ள 51ஆவது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மிகுந்த எச்சரிக்கை யுடனேயே எதிர் கொள்ளும். அத்துடன், சர்வதேச ரீதியாக தாழ்வடைந்துள்ள இலங்கையின் மாண்பை மீளவும் நிலை நிறுத்த முன்வரும் என்றே எதிர்பார்க்க முடியும்.

இத்தகைய தருணத்தில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தம் மீதான தடைகள்நீக்கப்பட்டுள்ளதை ஒரு நல்ல சந்தர்ப்ப மாகப் பயன்படுத்தி வடக்கு – கிழக்கு அரசியல் தீர்வு மற்றும் மனிதாபிமான பிரச்சனைகள் குறித்து சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு ஆக்கபூர்வமான அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கமுடியும்.

இதைவிடுத்து உலகத் தமிழர் பேரவை தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாது அதன் பேச்சாளர் சுரேன் சுரேந் திரனைப் போல எதனையும் சந்தேகக்கண் கொண்டு பாரக்குமிடத்து 'ஆறாப் புண்ணைக் காட்டி யாசகம்' பண் ணிக் கொண்டிருக்கும் நிலையிலேயே வடக்கு –கிழக்கு தமிழர் பிரச்னையும் தொடர்ந்து இருந்து வரும் என்றே கருத முடியும்.

# கைலாகு கொடுத்த சரத் வீரசேகரவை அவமதித்த சீனக் கப்பலின் கப்டன்!




சிறிலங்காவின் அம்பாந்தோட்டை துறை முகத்தை சீனாவின் யுவான் வாங்-5 16 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமை காலை சென்றடைந்தது. இந்நிலையில், கப்பலை வரவேற்பதற்காக சிறிலங்கா அமைச்சர்கள் சிலர் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் சிலரும் சென்றிரு ந்தனர்.

இவ்வாறு கப்பலை வரவேற்பதற்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, சீன கப்பல் கப்ரனுக்கு கைலாகு கொடுத்துள்ளார். எனினும் கப்ரன் சரத் வீரசேகரவுக்கு கைலாகு கொடுக்காது கையை உயர் த்தி காண்பிக்கும் புகைப்படம் ஒன்று சமுக ஊடங்களில் அதிகளவில் வலம் வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை சீன கப்பல் அம்பாந் தோட்டை துறைமுகத்தை சென்றடை ந்ததும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினர் கப்பலு க்குள் செல்வதற்கு அனுமதி கோரி யுள்ளனர். இருப்பினும் அவர்கள் உட் செல்ல முடியாதென அனுமதி மறுக்கப் பட்டுள்ளது எனவும் தகவல் வெளியாகி யுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் சிறிலங்கா வந்தடைந்த சீனக் கப்பல் 7 நாட்களுக்கு அம்பாந்தோட்டை துறை முகத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 19 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டையில் தரித்து நிற்கும் 19 ஆம் திகதி பிற்பகல் நாட்டில் இருந்து வெளியேறவுள்ளதாகவும் குறி த்த கப்பல் நிறுவனம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்வாக கட்டுப்பாட் டாளருக்கு அறிவித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**





ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

## 24 ஆகஸ்ட் 2022:-புதன் - பிரதோஷ விரதம்

## 30 ஆகஸ்ட் 2022- செவ்வாய் - விநாயகர் (ஆவணி) சதுர்த்தி

பகல் பூஜை உபயம்:-

திரு சுப்பிரமணி குடும்பம், திரு செல்வரெத்தினம் குடும்பம், திரு மனோகரன் குடும்பம்

இரவுப் பூஜை உபயம்:- திரு ஜெயகுமார் குடும்பம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு தமிழ்க்கட்சிகள் கூட்டாகக் கடிதம்!



ஐந்து தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு கூட்டாக அறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளனர். தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு, சர்வதேச கண்காணிப்புடனான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என இந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட 46-1 பிரேரணையில் உள்ள சரத்துக்களுக்கு மேலதிகமாக சில முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இந்த அறிக்கை அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா ஆகியோர் கூட்டாக, இந்த அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வு செப்டெம்பரில் நடைபெறவுள்ள நிலையில் அனுப்பி வைக்கப் பட்டுள்ள இந்த அறிக்கையில் ஆறு பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் துன்பத்தைத் தணிக்கவும், தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் அட்டூழியக் குற்றங்களுக்கு நீதி வழங்கவும் இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஐநா மனித உரிமைகள் பேரவையை கோரியுள்ளனர்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 2021 மார்ச் அறிக்கையின் பரிந்துரைக்கு அமைய இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதுடன் வட கொரியாவை போன்று ஐ.நா. பாதுகாப்புப் பேரவை இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

1983க்கு முந்தைய காலத்தை போன்று தமிழர் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் பிரசன்னத்தை குறைத்தல் வேண்டும் எனவும், யுத்தம் முடிவடைந்து பதின்மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும், இன்னமும் அரசாங்கம் தமிழர் பிரதேசங்களில் அதே இராணுவ மட்டத்தை பேணுவதாகவும் தமிழ் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதேச எல்லைகளை மீள் நிர்ணயம் செய்து அரசாங்கத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்படுகின்ற திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்த வேண்டும் எனவும் அவர்களது அறிக்கையில் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்காக சர்வதேச கண்காணிப்புடனான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகியுள்ள நிலையில் அவர் அரச தலைவருக்கான பாதுகாப்பை இழந்துள்ளதாக தெரிவித்துள்ள தமிழ் கட்சிகளின் தலைவர்கள், அவரை நீதிக்கான பொறிமுறைக்கு முன் நிறுத்துமாறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையை கோரியுள்ளனர்.

சுயாதீனமாக அரசியல் கருத்துக்களை வெளிப் படுத்துவதற்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் ஐந்து தமிழ் கட்சிகளினதும் தலைவர்கள் கூட்டாக அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலம்பெயர் தமிழர் தடை நீக்கம்! ஜனாதிபதிக்கு டக்ளஸ் நன்றி தெரிவிப்பு!



புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் இந்த தீர்மானத்தினை நல்லெண்ணச் சமிக்கையாக புலம்பெயர் உறவுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவினை எந்தவிதமான சஞ்சலமும் இன்றி துணிச்சலாக வெளிப்படுத்திய ஈ.பி.டி.பி. கட்சி, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் சுமார் 10 அம்சக் கோரிக்கை முன்வைத்திருந்தது. அதில் ஒன்றாக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை நீக்கப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப் பட்டிருந்தது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தடை நீக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தினை புலம்பெயர் உறவுகள் சரியான சந்தர் ப்பமாக பயன்படுத்தி, நாட்டில் வாழ்ந்து வருகின்ற தங்களுடைய உறவுகளின் பொருளாதார பலத்தை கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார். அத்துடன் ஏனைய கோரிக்கைகளும் முன்னுரிமை அடிப்படையிலாயினும் நிறைவேற்றப்படுவதுடன், தடைசெய்யப்பட்டுள்ள முஸ்லீம் அமைப்புக்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து நியாயமான நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளார்.

# "அரகலய"வின் முடிவு?

மிகவும் ஆர்ப்பாட்டமாக எழுச்சியுற்ற அரகலய, மிகவும் மலினப்படுத்தப்பட்ட நிலையில் முடிவுற்றிருக்கின்றது. ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து அங்குள்ள பொருட்களைக் கையாண்டவர்கள் அனைவரும் தேடப்பட்டு வருகின்றனர். முன்னணியில் இருந்த பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஆரம்பத்தில் இதற்காக வாதிட்டவர்கள், இதனை ஆதரித்தவர்கள் பலர் அமைதியாக வெளியேறி விட்டனர்.

கொழும்பு மத்தியதர வர்க்க பின்புலம் கொண்ட குழுக்கள் அனைவரும் கிராமங்களிலிருந்து வந்த போராட்டக்காரர்களை நடுவீதியில் விட்டு சென்று விட்டனர். இதன் மூலம் போராட்டங்களின் மூலம் அதிகாரங்களைக் கையகப்படுத்தலாம் என்னும் நம்பிக்கை தோற்கடிக்கப் பட்டிருக்கின்றது.

இலங்கைத்தீவின் வரலாற்றில் புரட்சிகர அரசியல் முன்னெடுப்புக்கள் அனைத்துமே தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. தென்னிலங்கையின் ஜே. வி. பி. கிளர்ச்சி முற்றிலுமாக நசுக்கப்பட்டது. ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டனர். ஜே.வி.பியின் தலைவர் ரோகண விஜயவீர இரகசியமாகக் கொல்லப்பட்டார்.

உண்மையில் அவரை அரசியல் செய்ய அனுமதித்திருக்கலாம் ஆனால், சிங்கள ஆளும் வர்க்கம் அதனை அனுமதிக்கவில்லை.

இதேபோன்று, தென்னிலங்கையின் ஆளும் வர்க்கத்துக்கு சவாலாக அமைந்த, தமிழ் ஆயுத இயக்க அரசியலை அழிப்பதிலும் சிங்கள ஆளும் வர்க்கம் ஓரணியில் செயல்பட்டு, வெற்றி பெற்றது.

இதில் ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ, பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ என்னும் பெயர்களில் எவ்வித வேறுபாடும் இல்லை.

தமிழர்களின் ஆயுத எழுச்சியை முடக்குவதற்கான வலுவான அடித்தளங்கள் அனைத்துமே, மேற்குலகு சார்பான ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் தான் வலுவாக முன்னெடுக்கப்பட்டது.

முதலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகள் பின்னர் ரணசிங்க பிரேமதாஸவால், வெற்றிகரமாக அறுவடை செய்யப்பட்டது.

ஜே.ஆர். விடுதலைப் புலிகளை, இந்தியப் படைகளுக்கு எதிராகத் திருப்பும் காய்நகர்தல்களை முன்னெடுத்தார்.

பிரேமதாஸ புலிகளையும், இந்தியாவையும் மோத வைப்பதில் வெற்றி பெற்றார்.

சிங்கள ஆளும் வர்க்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்னும் பாகுபாடுகள் இல்லை.ஆளும் வர்க்கம் எப்போதுமே ஒன்று தான். வேண்டுமானால் கட்சியின் கொடிகள் வேறுபடலாம்.

சந்திரிகா குமாரதுங்க ஆட்சியிலிருந்த காலத்தில், ஒரு விடயம் மிகவும் வெளிப்படையாகவே பேசப்பட்டது. அதாவது, ஒன்றில் எங்களுக்கு வாக்களியுங்கள் அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள், மூன்றாம் தரப்பான, ஜே. வி. பிக்கு வாக்களிகாதீர்கள் என்று அப்போது தேர்தல் மேடைகளில் பேசப்பட்டது. இது தான் ஆளும் வர்க்கத்தின் அரசியல் நிகழ்ச்சிநிரல்.

இந்த பின்னணியில் நோக்கினால், அரகலய எப்போது, இடதுசாரி செல்வாக்குக்கு உட்பட்ட குழுக்களால் கட்டுப்படுத்தப்பட்டதோ, எப்போது தென்னமெரிக்க கிளர்ச்சி முறைமையின் கீழ், ஜனாதிபதி செயலகம் கையகப்படுத்தப்பட்டதோ, அப்போதே சிங்கள ஆளும் வர்க்கம் விழித்துக் கொண்டது.

இந்தப் பின்னணியில் தான் ரணில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். உண்மையில் அரகலயவின் உச்ச பயனாளி ரணில் விக்கிரமசிங்க மட்டும் தான். அதன் உச்சப்பயனாளியான அவர், இப்போது அதனை முழுமையாக இல்லாதொழிக்கும் காரியத்தையே ஆற்றிக் கொண்டிருக்கின்றார். பெருமளவுக்கு அவரின் இலக்கு நிறைவேறி விட்டது.

இலங்கைத் தீவில் அரசை நிலை குலையச் செய்யும் அனைத்து முயற்சிகளும் தோற்கடிக்கப்படும் என்பது மீண்டுமொரு முறை தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில், கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது தேவைப்பட்டால், அழிப்பது என்பது தான் உலக ஆளும் வர்க்கத்தின் இலக்காகும்.

அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
10வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
23 ஒக்டோபர் 2022 ஞாயிறு

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம்! உலகத்தமிழர் பேரவை தெரிவித்துள்ளது என்ன?

2014 முதல் தடையும் தடைநீக்கமும் தொடர்கின்றது நாங்கள் தமிழ் பேசும் மக்களின் நியாயப்படுத்தக்கூடிய அபிலாசைகளை அடைவது குறித்தும் 2015 பொறுப்புக்கூறும் தீர்மானம் குறித்தும் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளோம் என உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் ஜலண்ட் நாளிதழிற்கு தெரிவித்துள்ளார்

2014 இல் என்னையும் உலக தமிழர் பேரவையையும் தடை செய்தார்கள், 2015இல் தடையை நீக்கினார்கள் 2021 இல் மீண்டும் தடை விதித்தார்கள் 2022 இல் தடையை நீக்கியுள்ளனர் என தெரிவித்துள்ள அவர் தமிழ் பேசும் மக்களின் நியாயப்படுத்தக் கூடிய அபிலாசைகளை அடைவது குறித்தும் 2015 பொறுப்புக்கூறும் தீர்மானம் குறித்தும் தாங்கள் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளதாக தெரிவித்தார் என ஜலண்ட் தெரிவித்துள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஒவ்வொரு தடவையும் ராஜபக்சாக்கள் அது மகிந்தவாகயிருந்தாலும் சரி கோத்தபாயவாகயிருந்தாலும் சரி தங்கள் சீற்றத்துடனான எதிர்வினைக்காக எங்களை தடை செய்வார்கள் என சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார் என ஜலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.



அதன் பின்னர் எந்த அரசாங்கமோ இலங்கையின் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த முற்போக்கானவர்கள் உட்பட சர்வதேச அமைப்போ பரந்துபட்ட ஊடகங்களோ இந்த தடையை அங்கீகரிக்கவில்லை என்பதை பின்னர் உணருவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் மனித உரிமை பேரவையின் அமர்விற்கு முன்னர் ஆட்சியில் உள்ளவர்கள் எங்கள் மீதான தடையை நீக்குவார்கள் 2014 முதல் இது இடம்பெறுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகமும் இலங்கையில் உள்ள ஊடகங்கள் அடங்கிய பங்குதாரர்களும் இந்த தடையின் அர்த்தத்தை புரிந்துகொண்டு அதனை அலட்சியம் செய்தமைக்காக உலக தமிழர் பேரவை நன்றியுடையதாக உள்ளது என சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

2014 முதல் 2021 வரையிலான இந்த தடை காரணமாக இலங்கை இழந்த அந்நிய செலவாணி குறித்து நாங்கள் மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளோம் வருடாந்தம் 300 மில்லியன் டொலர்களிற்கு மேல் இலங்கை இழந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ச கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளர் கமால்குணரட்ண முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜிஎல்பீரிஸ் மற்றும் மோசமான பயங்கரவாத நிபுணர் ரோகன் குணரட்ண ஆகியோர் இந்த இழப்பிற்கான காரணத்தை ஏற்க வேண்டும், தன்னிச்சையான முடிவுகளிற்காக அவர்கள் பொறுப்புக்கூறச் செய்யப்பட வேண்டும், இந்த தடைகளால் என்ன பயன் என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைப்புகளையும் தனிநபர்களையும் தடை செய்யும் நடவடிக்கை முழுவதும் தன்னிச்சையானது அர்த்தமற்றது இலங்கைக்குள் மாத்திரமல்ல சர்வதேச அளவில் உடன்பட மறுத்தலை கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் நோக்கமாக கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டமைக்கான காரணத்தை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும் என கலாநிதி குணதாச அமரசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ள தருணம் எங்களிற்கு கவலையளிக்கின்றது என அவர் தேசிய அமைப்புகளின் சம்மேளனங்களின் சார்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளை அடிப்படையாக வைத்து இவ்வாறான நடவடிக்கைகளை நியாயப்படுத்த முடியாது எனகலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கம் கொண்ட நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது என குறிப்பிட்டுள்ள அவர் சில புலம்பெயர் அமைப்புகள் தனிநபர்கள் மீதான தடையை நீக்குவதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறை குறித்து வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்

சமீபத்தில் ஜனாதிபதியை சந்தித்த பின்னர் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சிவி விக்னேஸ்வரன் தங்களுடைய வேண்டுகோள்கள் தொடர்பில் பல வாக்குறுதிகள் கிடைத்துள்ளன என தெரிவித்திருந்தார், தடைநீக்கமும் அந்த வாக்குறுதிகளில் ஒன்றா என குணதாச அமரசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# சர்வகட்சி அரசு அமைக்க பஸில் பாரிய தடை! ரணில் மூலம் ஆட்சி செய்யவே முயற்சிகள்!



சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ பாரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மக்களால் புறக்கணிக்கப்பட்ட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகிறது.

பதவியை தக்க வைத்துக் கொள்ள ஜனாதிபதி பொதுஜன பெரமுனவிற்கு ஏற்றாற்போல் செயற்படுகிறார் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். சர்வக்கட்சி அரசாங்கம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றினைத்து பொது கொள்கைக்கமைய வரையறுக்கப்பட்ட கால அடிப்படையில் சர்வக்கட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்.

சர்வக்கட்சி அரசாங்கத்தின் வியூகம் மற்றும் அதன் செயற்பாடு தொடர்பில் ஜனாதிபதி இதுவரை வெளிப்படை தன்மையுடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்கவில்லை.

சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ பாரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளார். சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்காமல் மக்களால் புறக்கணிக்கப்பட்ட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை முன்னெடுத்து செல்லும் அரசியல் சூழ்ச்சியினை பஷில் ராஜபக்ஷ முன்னெடுத்துள்ளார்.

பாராளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பின் போது பலருக்கு வரபிரசாதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், பலர் அச்சுறுத்தப்பட்டுள்ளமை தற்போது வெளிப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக பொதுஜன பெரமுனவின் தேவைக்கமைய செயற்படுகிறார்.

சர்வ கட்சி அரசாங்கத்தில் பொதுஜன பெரமுன பிரதான பங்குதாரராக செயற்படும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளமை அவதானத்திற்குரியது. மக்களால் கடுமையாக வெறுக்கப்படும் தரப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்க வேண்டும் என பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளமை அரசியல் கட்டமைப்பு தொடர்பில் மக்கள் கொண்டுள்ள வெறுப்பை தீவிரப்படுத்தும்.

அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் நிறைவடைந்துள்ளது ஆகவே தனது விருப்பப்படி செயற்படலாம் என அரச தலைவர்கள் கருதுவது தவறானது. சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபித்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண மக்கள் அரசாங்கத்திற்கு காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைக்காமல் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மக்கள் மீண்டும் போராடுவார்கள்.

# தடை நீக்கத்துக்கு கூட்டமைப்பு வரவேற்பு!

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் சிலவற்றின் மீதும் மற்றும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு நீக்கியமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்புத் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் பெயர்களையும் கறுப்புப் பட்டியலில் இருந்து இலங்கை அரசு நீக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிபந்தனைகளின் 1373இன் கீழ், இலங்கைக்குள் 18 அமைப்புக்களுக்கும், 577 தனிநபர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு தடை விதித்தது.

இந்நிலையில், இலங்கைக்குள் தடை செய்யப்பட்ட உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ், ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் திராவிட ஈழ மக்கள் சம்மேளனம் ஆகிய 6 அமைப்புக்கள் மீதான தடையும், 316 தனிநபர்களுக்குமான தடையும் நீக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துஅதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் இதனை வரவேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில், பொதுவாக இது நல்ல செய்தி என்று தான் நாங்கள் எண்ணுகின்றோம். பொருளாதார ரீதியாக உதவிகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் சிலர் மீதான தடையை ரணில் விக்ரமசிங்க நீக்கியுள்ளார் என்றும் நாங்கள் எண்ணலாம்.

இந்த நடவடிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை ரணில் அரசாங்கம் வழங்க முன் வந்தால் தான் அவர்கள் எதிர்பார்க்கின்ற புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளும், பொருளாதார நெருக்கடியையும் நிவர்த்தி செய்வதற்கான உதவிகளும் கிடைக்கும் என்று கருத வேண்டும்.

அதேவேளை, ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தொடரும் தடையை நீக்க ரணில் அரசாங்கம் முன்வர வேண்டும் என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் சிலர் மீதான தடையை அதிபர் ரணில் விக்ரமசிங்க நீக்கியுள்ளமையை வரவேற்கின்றோம்.

இன்னும் பல புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தனி நபர்களின் பெயர்களும் தடைசெய்யப்பட்ட பட்டியலிலேயே காணப்படுகின்றன. அந்தத் தடையையும் நீக்குமாறும் நாம் ரணில் அரசாங்கத்திடம் கோருகின்றோம். முதலீடு செய்யத் தயாராக இருக்கும் புலம்பெயர் உறவுகள் அச்சமின்றி தங்கள் முதலீடுகளை செய்வதற்கு இந்தத் தடையை நீக்குவது அவசியமாகும்.

இதைக் கருத்தில் கொண்டு ஏனைய புலம்பெயர் அமைப்புகளையும் தனி நபர்களின் பெயர்களையும் தடைப்பட்டியலில் இருந்து நீக்குமாறு சிறிலங்கா அதிபரிடம் கோருகின்றோம்'' எனவும் தெரிவித்தார்.

இதேவேளை மூன்று முக்கிய அமைப்புகள் உட்பட 15 அமைப்புகள் மற்றும் 55 பேருக்கு தொடர்ந்தும் இலங்கை அரசாங்கம் தடைவிதித்துள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி . தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர் புனர்வாழ்வு கழகம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தேசிய தவ்ஹீத் ஜமாத் மற்றும் சேவ் தி பேர்ல் உள்ளிட்ட 15 அமைப்புகள் மற்றும் 55 பேர் மீதான தடை தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது.

## சில புலம் பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கத்தை வரவேற்கும் கனடிய தமிழர் பேரவை உறுதியான தொடர் நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கிறது!

இலங்கையில் இன உறவுகள் மற்றும் பொருளாதார விளைவுகள் மேம்படும் வகையில் புதிய இலங்கை அரசாங்கத்தால் சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் தடைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதைக் கனடிய தமிழர் பேரவை (CTC) வரவேற்கிறது. எவ்வாறாயினும், ஓகஸ்ட் 1, 2022 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பல தமிழ், முஸ்லிம் அமைப்புக்கள், தனிநபர்கள் இன்னும் தடைப் பட்டியலில் இருப்பது ஏமாற்றத்தையளிக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்தல், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட அனைத்துத் தனியார் காணிகளையும் விடுவித்தல், வடக்கு கிழக்கை இராணுவமயமாக்கலில் இருந்து விடுவித்தல், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கனடிய தமிழர் பேரவை வலியுறுத்துகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2021 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 46-1 தீர்மானத்திற்கு முழுமையாக இணங்குமாறும், தற்போதைய தீர்மானத்தின் அனைத்து அம்சங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றுமாறும் இலங்கை அரசாங்கத்தைக் கனடிய தமிழர் பேரவை வலியுறுத்துகிறது.

# ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கோரிக்கை காரணமாக ஐ.நா.மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவால் பிற்போடப்பட்ட மீளாய்வுக் கூட்டம்



இலங்கையில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டம் பிரயோகிக்கப்படும் முறை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் குழுவினால் எதிர் வரும் நவம்பர் மாதம் மேற்கொள்ளப்படவிருந்த மீளாய்வு பிற்போடப்பட்டிருப்பதுடன், அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாகவே மீளாய்வைப் பிற்போடுவதற்கான இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடும் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஐ.சி.சி.பி.ஆர் என்று பரவலாக அறியப்படும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச்சட்டம் ஒவ்வொரு நாடுகளிலும் எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றது, அதன் பயன்பாடு எவ்வாறானதாக அமைந்திருக்கின்றது என்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் குழுவினால் 4 வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்படும்.

அந்த வகையில் இலங்கையில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச்சட்டம் பிரயோகிக்கப்படும் முறை தொடர்பான மீளாய்வு எதிர் வரும் நவம்பர் மாதம் நடாத்தப்படுமென ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் குழுவினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதனை முன்னிறுத்தி அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களிடம் கோரப்பட்டிருந்தது.

இருப்பினும் சில தினங்களுக்கு முன்னர் எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் பிரயோகம் தொடர்பான மீளாய்வு மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளுக்கு மின்னஞ்சல் ஊடாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருப்பதுடன், எனவே அவர்கள் மீண்டும் இச்சட்டத்தின் பிரயோகம் பற்றிய புதிய விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியேற்படலாம் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் சிறுபான்மையின தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைப் பொறுத்தமட்டில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச்சட்டப்பிரயோகம் தொடர்பான மீளாய்வு மிகமுக்கியமானதாகும் என்று சுட்டிக் காட்டியுள்ள பெண்கள் தொடர்பான செயற்பாட்டு வலையமைப்பின் இணை ஸ்தாபகரும் பெண்கள் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ஷ்ரீன் ஸரூர், நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற நிலையைக் காரணங்காட்டி தாம் நிறைவேற்றவேண்டிய மனித உரிமைகள்சார் கடப்பாடுகளிலிருந்து நழுவிச்செல்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா? என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தொடர்ச்சியான கண்காணிப்புக்கள் மற்றும் அழுத்தங்களிலிருந்து விடுபட்டு நழுவிச் செல்வதற்கு ஏதுவான பாதையையே இலங்கை அரசாங்கம் தெரிவு செய்திருப்பதாகவும், ஆனால் அதற்கு மாறாக மனித உரிமைகள் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அழுத்தத்தைத் தொடர்ச்சியாகத் தக்கவைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா - அமெரிக்காவின் தேவைக்காக வெளி விவகாரக் கொள்கையை மாற்ற முடியாது என்கிறார் முன்னாள் அமைச்சர்!

இந்தியா,அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேவைக்கமைய எமது வெளிவிவகார கொள்கையினை மாற்றியமைத்துக் கொள்ள முடியாது.



யுவான் வோங் -05 கண்காணிப்பு கப்பல் உளவு பார்ப்பதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருகிறது என இந்தியா குறிப்பிடுவது அடிப்படையற்றது என பாராளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். யுவான் வான்ங்-05 கண்காணிப்பு கப்பல் தொடர்பில் வினவிய போது மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

சீனாவின் யுவான் வான்ங்-05 கண்காணிப்பு கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருவதற்கான அனுமதியை முன்னாள் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜி.எல் பீரிஸ் வழங்கினார்.

தற்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்ய முயற்சிப்பது சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையின் வெளிவிவகார கொள்கையினை மலினப்படுத்தும்.

யுவான் வோங் கப்பல் விவகாரத்தில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அழுத்தம் பிரயோகிப்பதை அவதானிக்க முடிகிறது.

இவ்விரு நாடுகளின் தேவைகளுக்காக இலங்கையின் வெளிவிவகார கொள்கையினை மாற்றியமைத்துக் கொள்ள முடியாது.இலங்கையின் வெளிவிவகார கொள்கை நடுநிலையாக பேணப்பட வேண்டும்.

யுவான் வோங் -05 கண்காணிப்பு கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருவதை இந்தியா கடுமையாக எதிர்க்கிறது. இந்தியா மற்றும் அமெரிக்காவின் யுத்த கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரும் போது சீனா ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சீன கப்பல் உளவு பார்ப்பதற்காகவே அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருகிறது என இந்தியா குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும்.

சீனாவின் கப்பல் இந்தியாவை உளவு பார்ப்பதற்கு அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தர வேண்டிய தேவை கிடையாது. அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தராமல் கடற்பரப்பில் இருந்தவாறே இந்தியாவை உளவு பார்க்க முடியும்.ஆகவே இந்த கப்பல் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

# செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நடைபெற்றது!

செஞ்சோலை வளாகத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இலங்கை விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் உயிரிழந்த பாடசாலை மாணவிகள் 54 பேர் உட்பட கொல்லப்பட்ட 61 பேரின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, முல்லைத்தீவு வள்ளிபுனம் பஇடைக்கட்டு சந்திப் பகுதி மற்றும் விமான தாக்குதல் இடம்பெற்ற செஞ்சோலை வளாகம் அமைந்திருந்த பகுதியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

முன்னதாக செஞ்சோலை வளாகம் அமைந்திருந்த பகுதியில் உயிரிழந்த மாணவி ஒருவரின் உறவினரால் சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது .

அதனை தொடர்ந்து செஞ்சோலை வளாகத்துக்கு செல்லும் வீதியின் ஆரம்பத்தில் உள்ள நினைவேந்தல் வளைவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வொன்று இடம் பெற்றது .இந்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாணவிகளின் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் உயிரிழந்த மாணவிகளின் பெற்றோர் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.




நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெற்ற பகுதிகளில் சிவில் உடைதரித்த புலனாய்வாளர்கள் மற்றும் படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டதோடு புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டிலும் ஈடுபட்டிருந்தனர் .

கடந்த 2006ஆம் ஆண்டு இதேநாள் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர்கள் வளாகத்தில் முதலுதவி பயிற்சிக்காக தங்கிநின்ற மாணவர்கள் மீது இலங்கை விமானப் படை விமானங்கள் குண்டுவீசி தாக்குதல் நடத்தியதில் 54 மாணவிகள் கொல்லப்பட்டதுடன் 100க்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முல்லைத்தீவு வல்லிபுனம் செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது இலங்கை வான்படையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த பாடசாலை மாணவர்களின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதான தூபியில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவுருவ படத்திற்கு ஈகைச்சுடரேற்றப்பட்டதோடு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு ஒரு நிமிட அகவணக்கமும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது. யாழ் பல்கலைக் கழக மாணவ ஒன்றியத்தின் பிரதிநிதிகள், மாணவர்களகலந்து கொண்டிருந்தனர்.

# சிதையப் போகும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு?

22 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களைக் கொண்டிருந்த கூட்டமைப்பு இரண்டு தசாப்பதங்களுக்குள் 50 சதவீதமான வீழ்ச்சியைக் கண்டுள்ளது. அத்துடன் கூட்டமைப்பிலிருந்து கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுரேஷ்பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர முன்னணி ஆகிய இரு கட்சிகள் வெளியேறியும் உள்ளன.

கூட்டமைப்பின் பிரதான கட்சியாக இருக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சி தேர்தல் அரசியலுக்குள் வலிந்து இழுத்துவந்த விக்னேஸ்வரன், அனந்தி சசிதரன் ஆகியோர் வெளியேறி தனிக் கட்சியை உருவாக்கியும் உள்ளார்கள்.

இந்த நிகழ்வுகளுக்கு கூட்டமைப்பு ஒரு ஜனநாயக கட்டமைப்பு. கொள்கை ரீதியாக பயணிக்க கூடியவர்கள் உள்ளே வரலாம். முடியாதவர்கள் வெளியே செல்லலாம் என்று அதன் தலைமை ‘சாணக்கிய’ பதிலை அளிக்கிறது. ஆனால், கூட்டமைப்பின் பிரதிநிதித்துவச் சுருக்கத்தால், பிரச்சினை தலைமைக்கு அல்ல. ஒட்டு மொத்த தமிழினத்துக்குமானதே.

கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் சக்தியாக திகழ வேண்டும் என்பதற்காக அதனையொரு வலுவான அரசியல் கட்டமைப்பாக்குவதற்கு பல்வேறு பிரயத்தனங்கள் முன்னெடுக்கப்பட்டன. மன்னார் மறை மாவட்ட மறைந்த ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை முதல் சமயத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், புத்திஜீவிகள், புலம்பெயர் அமைப்பினர் என்று பலதரப்பினரும் முயற்சித்தனர். இருப்பினும் அவையனைத்தும் தோற்றுப் போயுள்ளன.

இந்நிலையில் சமகாலத்தில் கூட்டமைப்பினுள் நிலைமைகள் மோசமடைய ஆரம்பித்திருக்கின்றன. கூட்டமைப்பிற்குள் குத்து வெட்டுக்கள் ஒன்றும் புதிய விடயம் அல்ல. அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே நீடித்து வருவது தான். ஆனால், தற்போது உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அணியமைத்து சமூக ஊடகங்களில் சக உறுப்பினர்களை மிகக்கேவலமாக சாடும் அளவிற்கு மூன்றாந்தர நிலையை அடைந்துள்ளது.

இந்தநிலை, தமிழ் மக்களுக்கு எரிச்சலை ஊட்டியுள்ளது. கூட்டமைப்பு உட்பட, தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள கட்சிகளை ஒன்றிணைத்து பயணிக்கச் செய்வதற்காக முயற்சிகளில் ஈடுபட்டவர்களும் சலிப்படைந்து விட்டனர். சலிப்படைந்தவர்கள், ஒன்றிணைந்து ‘அமைப்பாக’ முயற்சிக்கின்றனர் அந்த அமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்யும் நோக்கத்தையும் கொண்டிருக்கின்றனர் என்பது வேறுவிடயம்.

இவ்வாறிருக்க, கூட்டமைப்பின் சமகால குத்துவெட்டுக்களுக்கு பல காரணங்கள் இருந்தாலும், பிரதான காரணம் தலைமைத்துவப் போட்டி தான். சம்பந்தனைப் பொறுத்தவரையில் அடுத்த ஆறு மாதங்களில் தொண்ணூறை அடையப் போகின்றார். அவருடைய இயங்கு நிலைக்கு முதுமை பிரதான காரணமாகின்றது.

கூட்டமைப்பினுள் சம்பந்தனுக்கு அடுத்த சிரேஷ்டத்துவத்தில் இருப்பவர் சேனாதிராஜா. அவர், தேர்தல் தோல்வியைக் கண்டு விட்டார். இலங்கை தமிழரசுக்கட்சி நிருவாகத்திலும் வினைத்திறனை வெளிப்படுத்தவில்லை.

இதனால், அவர் தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவத்தில் நீடிப்பதில் கூட கேள்வியெழுந்துள்ளது. அவ்வாறான நிலையில் கூட்டமைப்பின் தலைமை அவருக்கு (அவர் விரும்பினால் கூட) எட்டாக்கனியாகவே இருக்கும்.

சேனாதிராஜாவும், கூட்டமைப்பு மற்றும் கூட்டமைப்புக்கு வெளியிலான ஆறுகட்சிகளின் கூட்டு என்று இரட்டைத் தோணியில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். ஆறு கட்சிகளின் கூட்டு செயற்பாட்டு ரீதியாக வெற்றி பெற்றாலும், ‘ஒற்றைத் தலைமை’ உருவாகப் போவதில்லை. அக்கூட்டில், ‘தலைமைத்துவ சபைக்கான’ முன்மொழிவே காணப்படுகின்றது என்பதை சுட்டிக்கூற வேண்டியுள்ளது.

இந்நிலையில் கூட்டமைப்பின் அடுத்த தலைமைத்துவத்துக்கான போட்டிக் களத்தில் நால்வரின் பெயர்கள் மேலெழுந்துள்ளன. அதில் முதலாமானவர், சுமந்திரன். தற்போதைய நிலையில், பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் முதல் ஏனைய சந்திப்புக்கள் வரையில் சம்பந்தனை பிரதிநித்துவம் செய்கிறார். அவர், கூட்டமைப்பின் தலைவர் என்ற பதவியின் அங்கீகாரத்தினை அனுபவத்தில் கண்டு விட்டார். ஆகவே, அவர் அந்தப்பதவியில் நீடிப்பதை அதிகம் விரும்புவதில் ஆச்சரியமில்லை.



அதேநேரம், சம்பந்தனை பிரதிநிதித்துவப்படுத்தி அவர் விடயங்களைக் கையாண்ட அனுபவம் கொண்டவராக இருப்பதால் அவரே அடுத்த தலைவராக நீடிப்பது பொருத்தமானது என்ற எண்ணப்பாடு உடையவர்கள், தமிழரசுக்கட்சிக்குள்ளும் இருக்கின்றார்கள், புலம்பெயர்ந்த மண்ணிலும் உள்ளார்கள்.

அவ்விதமானவர்கள், தமிழரசுக்கட்சியில் தலைவர் அல்லது செயலாளர் பதவியை சுமந்திரன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படுகின்றார்கள். சுமந்திரனிடமும் அவ்வாறான திட்டமொன்று உள்ளது. அதனால் தான் அவர் மத்திய குழு மற்றும், பொதுச்சபை ஆகியவற்றில் தனது ஆதரவுத்தளத்தினை கட்டமைத்து வருகின்றார்.

ஆனால். சுமந்திரனின், சாணக்கியனுடன் இணைந்ததான தனியோட்டமும் தமிரசுக் கட்சிக்குள்ளும், கூட்டமைப்பின் பங்காளிக்களுக்கும் வெறுப்பை ஏற்படுத்துவதாக உள்ள நிலையில் அவர் தவைமைத்துவத்தினை இலகுவாக அடைந்து விட முடியாது. இதில் மதமும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

இரண்டாமனவர் சிறிதரன். இவர் சுமந்திரனுக்கு எதிராக காய்நகர்த்துகிறார். அதிக விருப்பு வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவானாலும், கூட்டமைப்பின் தலைமைக்கான தெரிவில் போட்டியிட்டால் இவரால் இலக்கை அடையமுடியாது.

ஏனென்றால், சாள்ஸ் நிர்மலநாதனை தவிர கூட்டமைப்பின் தற்போதைய பங்காளிகளாக இருக்கும், ரெலோவோ, புளொட்டோ சுமந்திரன் அணியோ நிச்சயம் அவருக்கு ஆதரவை வழங்கப்போவதில்லை.

ஆகவே, தான் அவரும், தமிழரசுக் கட்சியின் தலைமையை நோக்கி நகருவதற்கான காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார். கட்சியில் அதிகாரத்தைப் பெற்றால் ஏனைய உறுப்பினர்கள் தன்வசம் இருப்பார்கள் என்பது அவரது கணக்கு. இதனால், தமிழரசுக்கட்சிக்குள் சுமந்திரன், சிறிதரன் தலைமையிலான பிரதான இரு அணிகள் உருவெடுத்து ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுகின்றன.

இந்த விடயங்களை சோனாதிராஜா உணர்ந்ததாலோ என்னவோ தான், தமிழரசுக்கட்சியின் மாநாட்டிற்கு நாள் குறிக்காது காலத்தை நகர்ந்து கொண்டிருக்கின்றார். தற்போதே, கட்சியின் கட்டுப்பாடுகள் அவரது கையை மீறி விட்ட நிலையில் இன்னும் எவ்வளவு காலத்திற்குச் செல்லமுடியும் என்பது அவருக்குத் தான் வெளிச்சம்.

கூட்டமைப்பின் தலைமைக்கான நகர்வினைச் செய்யும் மூன்றாமவர் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன். ரெலோவைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பின் ஸ்தாபகக் கட்சி, மற்றும் ஸ்தாபகத்தலைவர் என்பதை பிரதான விடயங்களாக முன்வைக்கிறது. அத்துடன் கூட்டமைப்பினுள் செல்வம் அடைக்கலநாதன் சம்பந்தனுக்குப் பின்னர், சிரேஷ்டத்துவமானவர் என்ற தர்க்கமும் ரெலோவிடம் காணப்படுகின்றது.

அதேநேரம், பாராளுமன்றக்குழுவின் ஊடாக கூட்டமைப்பின் தலைமைத்துவத்திற்கான தெரிவுக்குச் சென்றால், அடைக்கலநாதனின் தலைமைத்துவ இலக்கு கனவாகவே இருந்துவிடும் என்பதையும் ரெலோ நன்குணர்ந்துள்ளது. எனவே, தான் சம்பந்தனுக்குப் பின்னர் கூட்டமைப்பிற்கு ‘சுழற்சி முறையில் தலைமைத்துவம்’ என்ற முன்மொழிவை ரெலோ வெளிப்படுத்தியுள்ளது. அவ்வாறு சுழற்சி முறையிலான தலைமைத்துவ முன்மொழிவை ஏனைய தரப்புக்கள் ஏற்றுக் கொண்டால், சுழற்சி முறைத் தலைமைத்துவத்தின் முதற் காலத்தினை ரெலோ இறுக்கமாகப் பற்றிப்பிடித்து அடைக்கலநாதனை தலைமைக்காக முன்மொழியும்.

அதன் மூலம் கூட்டமைப்பின் தலைமையை கையிலெடுக்கும் ரெலோ பதவியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இணங்கியதற்கமைய மாற்றிக் கொடுக்குமா என்பதெல்லாம் அடுத்த கட்ட விடயங்கள். ஏனென்றால் கூட்டமைப்பின் பேச்சாளர் விடயத்தில் சம்பந்தன் தமக்கு உறுதிப்பாட்டை வழங்கியுள்ளபோதும் அது இன்னமும் நடைமுறைச் சாத்தியமாகவில்லை என்ற வலி ரெலோவுக்குள்ளது.

இதனை விடவும், தலைமைத்துவப் போட்டியில் நான்காமனவர் சித்தார்த்தன். தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த தர்மலிங்கத்தின் புதல்வர். புளொட்டின் கடந்த காலத்தை மறந்து அவருக்கு கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை வழங்குவது பொருத்தமென தமிழரசுக் கட்சிக்காரரர்கள் சிலர் கருதுகின்றார்கள்.

அத்துடன், சித்தார்த்தனின் நெகிழ்வுப் போக்கு தலைமைத்துவத்திற்கு பொருத்தமெனவும் அவர்கள் வலுச் சேர்க்கின்றார்கள். ஆனால், அவர் தனியொரு பிரதிநிதி. ஏற்கனவே, போட்டிக் களத்தில் உள்ளவர்கள் ஓரிருவரையாவது உறுதியான ஆதரவாளர்களாக கொண்டவர்கள். சித்தார்த்தனுக்கு ரெலோ உதவியளித்தால் கூட ஏனையவர்களை கடந்து வெற்றிபெற முடியும் என்பது முயற்கொம்பான காரியமாகும்.

கூட்டமைப்பின் அடுத்த தலைமைத்துவத்துக்கான நகர்வுகளின் யதார்த்தம் மேற்கண்டவாறு இருக்கின்றபோதும், கூட்டமைப்பின் அடுத்ததலைவர் யார் என்ற கேள்வியை உறுப்பினர்களிடத்தில் கேட்டால் சம்பந்தன் இருக்கின்றார் தானே என்று தான் பதிலளிக்கிறார்கள்.

அதேநேரம், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடத்தில் உங்களுக்குப் பின்னர் கூட்டமைப்பின் தலைவர் யார் என்று கேள்வியெழுப்பினால், மக்கள் தமது தலைவரை தெரிவு செய்வார்கள் என்று இலாவகமாக பந்தைப் பரிமாற்றம் செய்து விடுகிறார்.

அதேநேரம், சம்பந்தன், அடுத்த தலைமையை அடையாளம் காண்பிப்பதற்கோ, அல்லது அடுத்த தலைமைக்கான பொறிமுறையொன்றை இணக்கப்பாடுகளுடன் ஏற்படுத்தாது விட்டச் செல்வராக இருந்தால் அவர் தான் கூட்டமைப்பின் இறுதித் தலைவராக இருக்கப் போகிறார். அது அவரது வரலாற்றுத் தவறாகவே பதியப்படும்.

ஏனென்றால் சம்பந்தனுக்காகவே, ரெலோவும், புளொட்டும் அமைதியாக இருக்கின்றன. சிறிதரன் போன்ற தமிழரசுக்கட்சிக்காரர்களும் அடக்கி வாசிக்கின்றார்கள். சம்பந்தனின் காலத்தின் பின்னர் அவர்கள் அவ்வாறு இருப்பார்கள் என்று கூறுவதற்கில்லை. அப்படியானால் சம்பந்தனுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குலைந்து விடும் என்பது தானே நிதர்சனம். சிலவேளைகளில், ஜனாதிபதி ரணிலின் ஆட்சிக்கால நிறைவுக்குள்ளும் அதற்கான முன்சமிக்ஞைகள் நிகழ்ந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

13 ஆகஸ்ட் 2022 முதல் 19 ஆகஸ்ட் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### DR முத்துவேலு சபாரெத்தினம்

யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலைப் வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் முத்துவேலு சபாரெத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 13 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். டாக்டர் முத்துவேலு சபாரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 18 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது ஆத்மா சாந்தியப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கரெத்தினம் தம்பிராஜா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கரெத்தினம் தம்பிராஜா அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 20 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி தங்கரெத்தினம் தம்பிராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 3வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 20வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 20வது ஆண்டு நினைவு நாள் 24 ஆகஸ்ட் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி

### திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் (ஆசிரியை - சாந்தி)




பருத்தித்துறை துன்னாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் (சாந்தி) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 23 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி நிர்மலாதேவி தவலிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



09 ஆகஸ்ட் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கரின் மூன்றாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கர் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



13 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமை தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த Dr முத்துவேலு சபாரெத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 ஆகஸ்ட் 2022 மிஸிசாகா கனடாவில் வசிக்கும் திரு சுப்பிரமணியம் இளங்கோ அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு இளங்கோ சுப்பிரமணியம் அவர்கள் 14 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



07 ஆகஸ்ட் 2022 கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிரதாபன் ஸ்ரீவதனா தம்பதிகளின் செல்வப்புதல்வி மயூராவின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி மயூரா தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து 15 ஆகஸ்ட் 2022 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



18 ஆகஸ்ட் 2022 கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஞானேந்திரன் லாவன்யா யூட் தம்பதிகளின் செல்வப்புதல்வி அன்ரியா ஞானேந்திரனின் 11வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி அன்ரியா தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



18 ஆகஸ்ட் 2022 வியாழக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு ஈஸ்வரபாதம் இராஜதுரை அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## பிறந்த நன்நாள் வாழ்த்துக்கள்!



### செல்வன் றோகான் றிச்சாட்
### செல்வன் றோசான் றிச்சாட்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி றிச்சாட் ரெட்ணகாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வன் றோகானின் முதலாவது பிறந்த நன்நாள் 20 ஆகஸ்ட் 2022 சனிக்கிழமையாகும். அத்துடன் செல்வன் றோசானின் 5வது பிறந்த நன்நாளு மாகும். அன்றைய தினம் தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடவுள்ள செல்வன்கள் றோகான், றோசான் சகோதரர்கள் தமது பெற்றோர்கள், பேரன் பேத்தி மாரோடு இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்கள். பிறந்த நன்நாள் காணும் செல்வன்கள் றோகான், றோசான் சகோதரர்கள் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உற்றார், உறவினர்களுடன் இணை ந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்து கின்றார்கள். வாழ்க வளமுடன்!

## இவர்களுக்காக 23 ஒக்டோபர் 2022
## இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்

**விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**





வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

வீடு
HOME

வாகனம்
AUTO

மோட்டர் சைக்கிள்
MOTOR CYCLE

படகு
BOAT

கனரக வாகனம்
TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
THUSHANTHAN RAVINDRAN
647-401-2653

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மேன்மைகொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா

# அருள் மிகு திரு முருகப்பெருமானின் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்



**ஆரம்பம்** 17 - 08 - 2022



**பூர்த்தி** 26 - 08 - 2022

அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய!

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 1ம் நாள் (17-08-2022) அச்சுவினி நட்சத்திரமும். ஸப்தமி திதியும் கூடியுள்ள நன் நாள் புதன் கிழமை மாலை தொடங்கி ஆவணிமாதம் 10ம் நாள் (26-08-2022) வெள்ளிக்கிழமை அமாவாசை திதியில் பூர்த்தியுறும் வகையில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும். கந்தன் பக்தர்களாகிய அனைவரும் கலந்துகொண்டு கந்தனின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

### 1ம் திருவிழா தொடக்கம் 8ம்திருவிழா வரை

மாலை 5.30 ஸ்நபன கும்பாபிஷேகம்
மாலை 7.00 மூலமூர்த்திகட்கு பூஜாரம்பம்
மாலை 7.30 கலை நிகழ்ச்சி
மாலை 8.00 வசந்தமண்டபப் பூஜை
தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா

### சப்பறத்திருவிழா

24-08-2022
மாலை5.00 ஸ்நபநாபிஷேகம்
மாலை7.00 பூஜாரம்பம்
மாலை7.30 கலைநிகழ்வுகள்
மாலை8.00 வசந்தமண்டபபூஜாரம்பம்
தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா

### தேர்த்திருவிழா

25-08-2022
காலை 7.30 ஸ்நபனாபிஷேகம்
காலை 09.00 பூஜாரம்பம்
காலை 10.00 வசந்தமண்டபபூசை
தொடர்ந்து தேர்வீதியுலா,
பச்சையணிந்த திருக்கோலம்
1.00 மணிபிராயச்சித்தசாந்தி

### 1008 சங்காபிஷேகம்

26-08-2022
7.00 காலை பூஜை
8.00 காலை சங்காபிஷேகம்
11.00 காலை பூஜாரம்பம்
மாலை வசந்தமண்டபபூசை

## தேர்த்திருவிழா அன்று வாகன தரிப்பிட வசதிகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன

சகல பக்தர்களும் தேர்த்திருவிழாவில்
காவடி,கற்பூரச்சட்டி,பாற்குடம் எடுக்கஉள்ள பக்தர்கள் பதிவுசெய்துகொள்வது நன்று
உற்சவநாட்களும் உபயகாரர்களின் விபரமும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 16-08-2022 | செவ்வாய்காலை | கணபதிஹோமம் | | பா-விக்கினராஜா |
| 17-08-2022 | புதன் | 1ம் திருவிழா | ஓம் பிரணவவுபதேச | சி-அ-ஐயாத்துரை குடும்பம் திருநெல்வேலி |
| 18-08-2022 | வியாழன் | 2ம் திருவிழா | திருநடனம் | சிவகுமார்,வனஜா கந்தசாமி குடும்பம் |
| 19-08-2022 | வெள்ளி | 3ம் திருவிழா | கார்த்திகை | நிரஞ்சன் பொன்னம்பலம், உதயமூர்த்தி கந்தையா குடும்பம் |
| 20-08-2022 | சனி | 4ம் திருவிழா | தண்டபாணி | சொர்ணலிங்கம் மகாலிங்கம் குடும்பம் |
| 21-08-2022 | ஞாயிறு | 5ம் திருவிழா | கைலாசவாகனம் | சந்திரேஸ்வரன் பரமசாமி குடும்பம் |
| 22-08-2022 | திங்கள் | 6ம் திருவிழா | மஞ்சம் | சாரங்கன் இராமகிருஸ்ணர் குடும்பம் |
| 23-08-2022 | செவ்வாய் | 7ம் திருவிழா | வேட்டை | பாஸ்கரன் கணேசானந்தன் |
| 24-08-2022 | புதன் | 8ம் திருவிழா | சப்பறம் | பிரதீபன் பாபநாசசிவம் கிருட்டிணர் குடும்பம் |
| 25-08-2022 | வியாழன்காலை | 9ம் திருவிழா | தேர் | விஜயசேகர் விஜயரட்ணம் குடும்பம் |
| 25-08-2022 | வியாழ மாலை | இரவுத்திருவிழா | தேரடி | மதனிக்கா குணேந்திரன் |
| 26-08-2022 | வெள்ளி காலை | 10ம்திருவிழா | 1008 சங்காபிஷேகம் | அசோக்குமார் வேலாயுதம் |
| 26-08-2022 | வெள்ளி மாலை | இரவுத்திருவிழா | சுவாமி வீதியுலா | |
| 27-08-2022 | சனி காலை | | பிராயச்சித்தம் | வல்லிபுரம் கணேசன் |
| 27-08-2022 | சனி மாலை | மாலை | திருக்கல்யாணம் | செந்தில்குமரன் ஆனந்தன் |
| 28-08-2022 | ஞாயிறு மாலை | மாலை | வைரவர்மடை | சிவா சின்னத்தம்பி குடும்பம் |

**கற்பூரச்சட்டி,பால்குடம், காவடி எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் பதிவுசெய்யவும்**

www.jeyadhurgatemple.com 1808 Drew Road, Mississauga, ON.L5S 1J6. 905-612-1856

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி
கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி
ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth



# OM SIVA SHAKTHI ASTROLOGER CENTER



## MASTER: KASHI GURUJI
OVER 40+ YEARS OF EXPERIENCE

அனைத்து மதத்தினரும் வரவேற்கப்படுகிறார்கள்.
Black Magic Removal in 24hours.
100% முடிவு உத்தரவாதம்.
வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு.
PRIVATE & CONFIDENTIAL
7 நாட்களும் திறந்திருக்கும்.
Call for Appointment

கைரேகை, எண்ஜோதிடம், ஜாதகம் விளக்கம், வெத்திலையில் மை போட்டுப் பார்த்தல், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி அறிதல்.
Specialist in bringing backloved ones.

- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை
- சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு
- பிள்ளைகளின் திடீர் குணமாற்றங்கள்
- லட்சுமி கடாட்சம், வாகனம், மனைப் பொருத்தம்
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்
- விசா பிரச்சனைகள், கோர்ட் வழக்கு
- ஆரோக்கியம், செய்வினை கோளாறு
- தொழில், மனை அபிவிருத்தி, முன்னேற்றம்
- பேய், பிசாசு, எதிரிகள் தொந்தரவு
- கண் திருஷ்டி, நாக தோசம் போன்ற

சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.
உடனே பண்டித் காசி குருஜியை சந்திக்கவும்.



647-324-9991 | 437-833-7796

Unit 16-2857 Lawrence Ave East
Scarborough, ON M1P 2S8

2891 A Derry Road East
Mississauga, ON, L4T 1A6

# 9ம் திகதியைக் கடந்தார் ரணில்?


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

ராஜபக்சக்களைப் போல ரணில் விக்கிரமசிங்க மந்திரம், பில்லிசூனியம் எண் ஜோதிடம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டவர் அல்ல. ஆனால் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் வீடுகளை எரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்வாறு மந்திரம் மாயம், பில்லிசூனியம்,எண் ஜோதிடம் என்பவற்றில் நம்பிக்கை கொண்ட ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலுக்குள் இருந்து வருகிறார்கள்.

அக்கூட்டு உளவியல் காரணமாகத் தான் மே மாதத்தில் இருந்து தொடங்கி ஜீலை மாதம் வரையிலுமான ஒவ்வொரு ஒன்பதாம் திகதியும் அரசியல்வாதிகளுக்கு கெட்ட நாட்களாக காணப்பட்டன.எனவே அந்த நம்பிக்கையை முறியடிக்க வேண்டிய தேவை ரணிலுக்கு இருந்தது. அவர் அதை வெற்றிகரமாக செய்திருக்கிறார். கடந்த ஒன்பதாந் திகதி ரணில் அகற்றப்படவில்லை, மாறாக கோட்டா கோகம கிராமம் காலி முகத்திடலில் இருந்து வெளியேறியது.

தொடர்ச்சியான கைது நடவடிக்கைகளால் அரகலய பெருமளவுக்கு செயலிழந்து விட்டது. இதுவரை எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பது போராடும் தரப்புக்கே தெளிவில்லாமல் இருக்கிறது. ஒரு மையத்திலிருந்து தகவல்களைத் திரட்டமுடியாத அளவுக்கு மையம் இல்லாத,தலைமை இல்லாத ஒரு போராட்டமாக அது அமைந்திருந்ததா? யார் யார் கைது செய்யப்படுகிறார்கள் என்பதைத் தொகுத்துக் கூறமுடியாத ஒரு நிலை.

ராஜபக்சக்கள் அகற்றப்படும் வரை போராட்டத்தின் கவசம் போல காணப்பட்ட சட்டத்தரணிகள் அமைப்பு ரணில் வந்த பின் போராட்டத்தை ஏறக்குறைய கைவிட்டு விட்டது. இளம் சட்டத்தரணிகள் சிலர் மட்டும் கைது செய்யப்படுகிறவர்களுக்காக நீதிமன்றங்களில் தோன்றுகிறார்கள்.

மேலும் ஒன்பதாம் திகதியையொட்டி பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் போலீஸ் நிலையங்களில் வாக்குமூலம் அளிப்பதற்காக அழைக்கப்பட்டார்கள். வாக்கு மூலம் வழங்குவதிலேயே ஒரு நாளின் ஏறக்குறைய அரைவாசி கழிந்து விட்டது. இவ்வாறு போலீஸ் நிலையத்தில் மினக்கெடும் பொழுது போராட்டத்தை எப்படி ஒழுங்கமைப்பது?


போராட்டத்தின் பக்கபலமாக காணப்பட்ட தொழிற்சங்கங்களையும் ரணில் வெற்றிகரமாகப் பிரித்துக் கையாண்டு விட்டார். சில கிழமைகளுக்கு முன் அரகலயவில் காணப்பட்ட ஒரு தொழிற்சங்கத் தலைவர் இப்பொழுது அரசாங்கத்தின் பக்கம் வந்து விட்டார்.

மொத்தத்தில் ரணில் விக்கிரமசிங்க தன்னை நோக்கி வந்த ஒன்பதாம் திகதியை போராட்டக்காரர்களுக்கே தோல்விகரமான ஒரு நாளாக மாற்றி விட்டாரா?

மன்னர்களுக்கு எதிராகத் தொடங்கிய பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக மேலெழுந்த நெப்போலியன், புரட்சியின் கனிகளை சுவீகரித்துக் கொண்டு தன்னைப் பேரரசனாக முடி சூட்டிக் கொண்டார். ஏறக்குறைய ரணில் விக்கிரமசிங்கவும் அப்படித்தான். அரகலயவின் கனி தான் அவர்.

அதேசமயம் அரகலயவை முறியடித்தவரும் அவரே. அரகலயக்காரர்கள் அமைப்பு மாற்றத்தைக் கேட்டார்கள். ஆனால் அதே அமைப்பு புதிய ஜனாதிபதியின் கீழ் தன்னை பாதுகாத்துக் கொண்டு விட்டது. அதே நாடாளுமன்றம்அதே தாமரை மொட்டுக் கட்சி அதே பெரும்பான்மை அதே அமைச்சர்கள்.

2015 ஆம் ஆண்டு மேற்கு நாடுகளும் இந்தியாவும் இணைந்து, பல சந்திப்புகளை நடத்தி ,பல்வேறு வகைப்பட்ட முகவர்களைக் கையாண்டு, ராஜபக்ஷ அணிக்குள் பிளவை ஏற்படுத்தி, ஓர் ஆட்சி மாற்றத்தைச் செய்தன. அந்த ஆட்சி மாற்றத்தின் பங்காளிகளில்



ஒருவராகிய மைத்திரி அதனை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் காட்டிக் கொடுத்தார். இப்பொழுது நான்கு ஆண்டுகளின் பின் கத்தியின்றி, ரத்தமின்றி, தேர்தல் இன்றி ஒரு ஆட்சி மாற்றத்திற்கான நம்பிக்கையூ ட்டும் தொடக்கமாக மேற்கு நாடுகள் இதை பார்க்குமா?

தமிழ்மக்களின் நோக்கு நிலையில் இருந்து அரகலய தொடர்பில் விமர்சனங்கள் உண்டு.தமிழ்மக்கள் அந்தப் போராட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனால், பங்களியாமை தான் தமிழ் மக்களின் பங்களிப்பு என்று கருதத்தக்க ஒரு நிலைமை தான் பெரும் போக்காகக் காணப்பட்டது.

எனினும் அதற்காக அரககலயவின் பெறுமதியை குறைத்து மதிப்பிட முடியாது. உலகில் அண்மை காலங்களில் இடம் பெற்ற தன்னெழுச்சியான மக்கள் எழுச்சிகளில் அரகலயவுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

69 லட்சம் வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற ஒரு குடும்பத்தை தோற்கடித்த ஒரு மக்கள் எழுச்சி அது. அதில் ஒரு படைப்புத்திறன் இருந்தது.அரசியல் கலந்துரையாடல் இருந்தது. அறவழிப் போராட்டங்கள் தொடர்பில் கற்றுக் கொள்ள வேண்டிய பல முன்னுதாரணங்கள் அதில் உண்டு. எல்லாவற்றையும் விட முக்கியமாக அரசியலில் மக்கள் பிரதிநிதித்துவத்துக்கு வெளியே மக்கள் அதிகாரத்தை உருவாக்குவதில் அரகலய ஒரு முன்னுதாரணத்தை காட்டியிருக்கிறது.

அரசியலில் மக்கள் அதிகாரத்தை ஒன்றில் தேர்தல் மூலம் பெறலாம். அல்லது துப்பாக்கி முனையில் பெறலாம். இவை இரண்டுக்கும் வெளியே மக்கள் அதிகாரத்தை ஸ்தாபிப்பது என்றால் அதை மக்கள் எழுச்சிகளால் தான் சாதிக்க முடியும்.அரகலய சில மாதங்களுக்காவது அதைச் சாதித்தது.ஆனால் அந்த மக்கள் அதிகாரம் தற்காலிகமானதாக காணப்பட்டது. கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக அது கருநிலையிலேயே காணப்பட்டது.அதை ஒரு உடலாக வளர்த்தெடுக்க அரகலயக்காரர்களால் முடியவில்லை.

ஏனென்றால் அரகலய என்பது ஒரு கதம்பமான அமைப்பு.தீவிர இடதுசாரிகளில் தொடங்கி தீவிர வலதுசாரிகள் வரை அங்கே காணப்பட்டார்கள். எல்லா மதப் பிரிவினரும் அங்கே காணப்பட்டார்கள். தன்னார்வலர்கள், படைப்பாளிகள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், போரில் உறுப்புகளை இழந்த முன்னாள் படைவீரர்கள், என்று வெவ்வேறு கொள்கை நிலைப்பாடுகளைக் கொண்டவர்கள் அங்கே ராஜபக்ஷ என்ற ஒரு பொது எதிரிக்கு எதிராக அணி திரண்டார்கள். அவர்களுக்கு பொது எதிரி இருந்தது.

ஆனால் ஒரு பொதுத் தலைமை இருக்கவில்லை. ஒரு பொதுவான சித்தாந்த அடித்தளமும் இருக்கவில்லை.

ஒன்றுக்கொன்று முரணான வெவ்வேறு நம்பிக்கைகளை கொண்டவர்களை ஒரு தலைமையின் கீழ் அணி திரட்டுவதில் அடிப்படையான வரையறைகள் உண்டு. அதனால் அந்தப் போராட்டத்துக்குள் இருந்து துலக்கமான தலைமைகள் மேலெழவில்லை. பதிலாக பேச்சாளர்கள் சிலர் மேலெழுந்தார்கள்.ஒரு கத்தோலிக்க மதகுருவும் பௌத்த பிக்கவும் முன்னிலைக்கு வந்தார்கள். ஆனால் அந்தப் போராட்டத்தின் மெய்யான இயக்குனர்கள் அவர்கள் அல்ல என்பது இலங்கை அரசாங்கத்தின் புலனாய்வுத்துறைக்குத் தெரியும்.

இந்த போராட்டத்தின் பின்னணியில் நின்ற பல செயற்பாட்டாளர்கள் முன்னரங்கிற்கு வரத் தயங்கினார்கள். அதற்கு பலமான ஒரு காரணம் உண்டு. இலங்கைத் தீவு ஏற்கனவே மூன்று தடவைகள் தன் சொந்த மக்களின் குருதியில் குளித்த ஒரு நாடு.அரசுக்கு எதிரான போராட்டங்களை எப்படிக் குரூரமாக நசுக்கலாம் என்பதற்கு இலங்கைத் தீவு ஒரு கெட்ட முன்னுதாரணம்.

அவ்வாறு தம்மையும் நசுக்கலாம் என்று அஞ்சிய காரணத்தால் அரகலயவின் பின்னணியில் நின்ற செயற்பாட்டாளர்கள் முன்னரங்கிற்கு வரத் தயங்கினார்கள். இதனால் அரகலய துலக்கமான தலைமைகளை மக்களுக்கு வெளிக்காட்டவில்லை. மக்களுக்கு எப்பொழுதும் துலக்கமான தலைமைகள் வேண்டும்.அருவமான தலைமைகளின் பின் மக்கள் தொடர்ச்சியாக அணிதிரள மாட்டார்கள். பொது மக்கள் எப்பொழுதும் குறியீடுகள், சின்னங்கள், ஜன வசியம் மிக்க தலைவர்கள் போன்றவற்றின் பின் அணி திரள்வதுண்டு. ஆனால் 69 லட்சம் வாக்குகளை பெற்று வென்ற ஒரு குடும்பத்தை தோற்கடித்த அரகலய அவ்வாறு துலக்கமான தலைமைகளை மக்கள் முன் நிறுத்தத் தவறியது.

அது மேலிருந்து கீழ்நோக்கிய பலமான தலைமைத்துவத்தை கொண்டதோர் அமைப்பு அல்ல. பக்கவாட்டாக ஒவ்வொருவரும் மற்றவரோடு பலவீனமான பிணைப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு. பலமான சித்தாந்த அடித்தளமும் அந்த அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட இறுக்கமான ஒரு மக்கள் இயக்கமும் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க அரகலியவை முறியடிக்க முடிந்திருக்கிறது.

அது ஒரு தற்காலிக வெற்றியா அல்லது நிரந்தர வெற்றியா என்பது பொருளாதார நெருக்கடியை ரணில், தாமரை மொட்டு அரசாங்கம் எப்படிக் கையாளப் போகிறது என்பதில்தான் தங்கியிருக்கிறது. குறிப்பாக ரணிலை மேற்கு நாடுகளும் சர்வதேச நாணய நிதியமும் எவ்வாறு பலப்படுத்தப் போகின்றன என்பதிலும் அது தங்கியிருக்கின்றது.

இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் இதற்கு முன்னப்பொழுதும் நிகழ்ந்திராத ஒரு மக்கள் எழுச்சியானது கிட்டத்தட்ட நான்கு மாதங்களின் பின் ஓய்வுக்கு வந்திருக்கிறது. அதிலிருந்து தமிழ் மக்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பல பாடங்கள் உண்டு. ஆயுதப் போராட்டம் அல்லாத வழிகளில் எப்படிப் படைப்புத் திறனோடு போராடலாம் என்ற முன்னுதாரணத்தை அது உலகம் முழுவதுக்கும் வழங்கியது. பிரதிநிதித்துவ ஜனநாயகப்பரப்பில் நாடாளுமன்றத்துக்கு வெளியே எப்படி மக்கள் அதிகாரத்தைத் தாற்காலிகமாகக் கட்டியெழுப்பலாம் என்பதனை அது உலகத்துக்கு நிரூபித்தது.

அதேசமயம் பலமான சித்தாந்த அடித்தளமோ, கட்டமைப்போ, தலைமைத்துவமோ இல்லையென்றால் ஒரு போராட்டம் எவ்வாறு பலவீனமடையும் என்பதற்கும் அது ஆகப்பிந்திய ஓர் உதாரணம்.

அரகலயவின் முடிவு தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் கடைசிக் கட்டத்தை ஞாபகப்படுத்துகிறதா? கடந்த சுமார் 50 ஆண்டுகாலப் பகுதிக்குள் இலங்கைத்தீவு மூன்று ஆயுதப் போராட்டங்களையும் தன்னெழுச்சியான ஒரு மக்கள் போராட்டத்தையும் தோற்கடித்திருக்கிறது. சிங்களபௌத்த அரசியல் பண்பாடு அரை நூற்றாண்டாக வரலாற்றில் இருந்து எதைக் கற்றிருக்கிறது?

## அளவெட்டி மக்கள் மன்றம் விடுக்கும் அறிவித்தல்!

அளவெட்டி மக்கள் மன்றத்தின் கோடைகால ஒன்றுகூடல், நிர்வாகத் தெரிவு, விளையாட்டுப் போட்டி 2022 எதிர்வரும் 28 ஆகஸ்ட் ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியில் இருந்து நடைபெறும்.

இடம்:- Milikan Park
Seation “B”
5555 Steeles Ave East

கூடிக் குலாவி விருந்துண்டு மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நிர்வாக சபை -



கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வளர்ச்சிக்காக
நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகளும் இராப்போசன விருந்தும்
SEP 3 SAT 6:00 PM
Nritya Dance Company
Amirthalaya Academy of Fine Arts
Smt. Lalithanjana Kathirgaman
SINGER HARI KARA SUTHAN
SUPER SINGER SARIKA
SUPER SINGER SINMAYE
SENTHURAN ALAGAIYA
Natiyakalai
Art Of Bharathanatyam
இராகமழை 2022
Sringeri Hall
80 Brydon Dr, Etobicoke, ON M9W 4N6
416-213-0110
TICKETS $100
FOR FAMILY OF 4
www.shrimuththumaari.com
Facebook / Canada Shri Muththumaari Amman
All Your Real Estate Needs....
JEYA Saam
Sales Representative
416.262.1400
1265 Morningside Ave Suite 203
Bus:(416)287-2222
Window Coverings
KS
Residential & Commercial
Sangeetha Kannan
416 270 9643 647 289 6483
Kannan Narayanasamy
416.556.9494
www.kannahomes.com
Cherrycrest
DENTAL CENTRE
905-913-0055
25 Cherrycrest Drive, Unit 5,
Brampton, ON L6P 3W4
Dr. M. Sathiyabalan
Buying, Selling, Leasing or Investing?
Jay Sritharan
Salesperson
Dir: 647.569.9392| Off: 416.581.8000
jaysri@upstaterealty.ca
Amazing Electric Motors Ltd.
Kenney Nithiy | 416-291-7342 | 416-540-8878
www.amazingelectric.ca | 430 Passmore Ave, Unit 19
WIGNA
Wigna Sivapathasundaram
Vimalraj Vimalathasan
FRAMEXPRESS
BASEMENT FRAMING
Tel: 343-987-1299
Framexpress@outlook.com
WINNER STAFFING SOLUTION
PRABHU
PRESIDENT/CEO
ஊடக அனுசரணை
ANALAI EXPRESS
ஈழநாடு
CTR
416-841-9600
CANADA SHRI MUTHTHUMAARI AMMAN TEMPLE
POOJA TIMING :
MORNING 9:30 A.M.
AFTERNOON 12:00 P.M.
EVENING 7:30 P.M.
Opening Hours :
Morning 9am - 1pm
Evening 5pm - 9pm
www.shrimuththumaari.com
Facebook / Canada Shri Muththumaari Amman
1771 ALBION ROAD, UNIT #1, TORONTO ONTARIO, CANADA M9W 5S7
BS.KISHOR
Transportation
Call Babu
647.654.3814
CENTUM
Advance Realty Inc.
Thusi Sivarajah
Mortgage Consultant
416.837.1549
BEST MORTGAGE RATE IN TOWN
SP Auto Collision Ltd.
FREE
BEST PRICE IN GTA
PRASANTH
647-701-5083
124 Manville Rd, Scarborough, ON M1L 4J5
TOYOTA
Esan Beauty Salon
Ladies | Gents | Kids
Best Caters in Town
416 - 626 - 8421
Window Glass & Door Services
தேவி நகை மாளிகை
DEVI JEWELLERYS
Tel: 416-850-9101
2625 Eglinton Ave E Scarborough, ON M1K 2S2
UTHAYA'S
SUPER MARKET
SAMY & SONS
EAZY CARRY
TAKE OUT RESTAURANT
Depths of Srilankan & South Indian Cuisine
SOORIYA
DECORATION
416 388 9904
416 454 8799
TKN
GOLDEN SUPPLIES
Three Star Auto
ANANDBPAVAN RESTAURANT
5310 Finch Ave E #24
416-885-0450

# ஆட்ட நாயகன் ரணில்! ரணிலில் வழி ஜே.ஆரின் வழி!

இலங்கை அரசியல் களம் கொந்தளித்துக் கொண்டேயிருக்கிறது. எதிர்பாராத திருப்பங்கள், அதிரடிகள், மாற்றங்கள், சறுக்கல்கள், எழுச்சிகள் என ஒரே அமர்க்களக் காட்சிகள். அடுத்து என்ன நடக்கும் என்ற பதிலற்ற கேள்விகள் எல்லாப் பக்கத்திலுமிருந்தும் எழுந்து கொண்டிருக்கிறது.

முன்பெல்லாம் அரசியல் போட்டிகள், மாற்றங்கள், திருப்பங்கள் நடந்தாலும் அதற்கு அப்பால் வெகு தொலைவில் சனங்களின் வாழ்க்கை அதிக சேதாரமில்லாமல் இயல்பு நிலையில் இருக்கும். இப்பொழுது சனங்களின் வாழ்க்கைதான் அதிகமாகக் கொதித்துக் கொண்டும் கொந்தளித்துக் கொண்டுமிருக்கிறது. அதன் மீது தானே பொருளாதாரக் குண்டு விழுந்து வெடித்துள்ளது.

இந்தப் பொருளாதாரக் குண்டு வெடிப்பினால் (**Economic explosion**) மண்ணெண்ணெய்க்கும் பெற்றோலுக்கும் எரிவாயுவுக்குமாக நாட்கணக்கில் தெருவில் நிற்க வேண்டியிருக்கிறது. போதாக் குறைக்கு எந்த நேரம் மின்வெட்டு வரும் என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்க வேண்டும். இது போதாதென்று அடுத்த ஆறு மாதங்களுக்குக் கடினமான காலமாக இருக்கும். விரும்பியோ விரும்பாமலோ இதைக் கடந்துதானாக வேண்டும் என்று மத்திய வங்கி ஆளுநரும் ஜனாதிபதியும் எச்சரித்திருக்கின்றனர். அப்படியென்றால் அரிசி, பருப்பு, சீனிக்கும் அடுத்த க்யூ முளைக்கப் போகிறது! இப்படி நாடிருக்கும் போது உச்சி குளிருமா? உள்ளம் கொதிக்குமா?

இந்தக் கொதிப்பும் கொந்தளிப்புமே அரசியற் களத்தையும் கொந்தளிக்களிக்க வைத்தது.

சனங்களின் கொதிப்பைச் சமாளிக்க முடியாமல் திணறிய ராஜபக்ஸவினரைக் காப்பாற்ற ஓடோடி வந்தான் இந்த நவீன ராதா கிருஸ்ணன் மன்னிக்கவும் ரணில் கிருஸ்ணன். அப்படி வந்தவர் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்தினார். ஒரு மாங்காயை அவர் தனக்கென எடுத்துக் கொண்டார். அது தான் அவருடைய ஜனாதிபதி பதவியும் ஆட்சித் தலைவர் என்ற அதிகாரமும்.

அடுத்த மாங்காய், ராஜபக்ஸவினரைப் பாதுகாத்து ஓரத்தில் வைத்திருப்பதாகும். ராஜபக்ஸவினரைப் பாதுகாப்பதென்பது ஒரு வகையில் ரணில் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது தான். அவர்களைப் பாதுகாக்கவில்லை என்றால் ரணிலுக்கும் பாதுகாப்பில்லை. ஏனென்றால் தலைமைப் பொறுப்புகள், பதவிகள் என்ற வெளி அரங்கிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தாலும் பாராளுமன்றத்திலும் அரசியல் தீர்மானங்களிலும் இன்னும் ராஜபக்ஸவினரின் கைகளே ஓங்கியுள்ளன.

'பொதுஜன பெரமுன' என்ற ராஜபக்ஸவினரின் கட்சியே பாராளுமன்றத்தில் செல்வாக்கையும் பலத்தையும் கொண்டுள்ளது. இப்படியிருக்கும் வரை அதை ரணிலும் அனுசரித்தேயாக வேண்டும். ரணிலை அனுசரித்துப் போனால்தான் ராஜபக்ஸவினருடைய தலைகளும் தப்பும். ஆக மொத்தத்தில் நடந்து கொண்டிருப்பது ஆளை ஆள் பாதுகாத்துக் கொள்ளும் அரசியலாட்டமாகும்.

இதற்குப் பின்னணியில் வெளிச்சக்திகளின் கைகளே வலுவாக உள்ளன. இலங்கை அரசியற் சீரழிவும் தலைமைகளின் தவறுகளும் நாட்டின் இறைமையை இல்லாதொழித்துள்ளன. அந்த வெளிச்சக்திகளே இப்படியானதொரு நிலைமையையும் உருவாக்கியுள்ளன.

இது தான் இலங்கை அரசியலில் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கிறது. வழமையான அதிகாரத் தரப்புகளைத் தவிர, புதிய சக்திகள் எதுவும் அதிகாரத்துக்கு வரக் கூடாது. மறந்தும் மக்களாட்சியோ மக்களுக்கான ஆட்சியோ நடந்து விடக் கூடாது. மக்களை வைத்துப் பிழைக்கும் கொம்பனிகளின் ஆட்சியே நீடிக்க வேண்டும் என்பதாக.

இதற்காக உள்ளூரின் அதிகாரச் சக்திகளும் வெளியாதிக்கத் தரப்புகளும் ஒரே புள்ளியில் இணைகின்றன. 2019இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி கூட்டாட்சி (நல்லாட்சி) நடந்ததும் இந்த அடிப்படையில் தான்.



இதற்காக இந்த அதிகாரத் தரப்புகள் எல்லாமே தமக்குள் சமரசங்களைச் செய்து கொள்கின்றன. இப்படி ஒன்றை ஒன்று தாங்கிப் பிடிக்கின்ற, தாங்கிப் பிடிக்க வேண்டிய, அரசியல் யதார்த்தத்தில் தான் இலங்கை நசிந்து, நலிந்து கொண்டிருக்கிறது.

நாடு நசிகிறதோ நலிகிறதோ எப்படியாவது போகட்டும். நாம் இதற்குள் நம்முடைய அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வோம்' என்றிருக்கும் ரணில் — ராஜபக்ஸவினரின் கூட்டு அரசியலில் இப்பொழுது ஆட்ட நாயகனாக ரணிலே இருக்கிறார். இதுவரையிலும் ராஜபக்ஸவினரின் ஆட்டக் களமாக இருந்த அரசியல் அரங்கை, அப்படியே அலாக்காகத் தூக்கித் தன்னுடைய கக்கத்தில் வைத்திருக்கிறார் ரணில்.

ஒரே நாளில் கோடீஸ்வரன் ஆகியதைப் போல திடீர் அரசியல் அதிர்ஸ்டக்காரன் ஆகியிருக்கிறார் விக்கிரமசிங்க. இப்பொழுது அவர் சிங்கமொன்று புறப்பட்டது என்று ஹாயாகப் பாடிக் கொண்டு தனக்கு எதிரேயிருக்கும் ஒவ்வொரு காய்களையும் 'ஹாயாக' வெட்டிக் கொண்டிருக்கிறார். இதில் யாருடைய தலைகள் உருளும்? யாருடைய தலைகள் தப்பும் என்று விக்கிரமாண்டேஸ்வரனுக்குத் தான் வெளிச்சம்.

ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் முதலில் செய்த களையெடுப்பு, காலி முகத்திடல் போராட்டக்காரரை தான் ஜனாதிபதியாகுவதற்கான வாய்ப்புகளை மறைமுகமாக உருவாக்கிக் கொடுத்த புண்ணியவான்களை தேடிப் பிடித்துச் சிறையில் தள்ளிக் கொண்டிருப்பதேயாகும். அடுத்த கட்டமாக அந்தப் போராட்டக்களத்தையே காலிமுகத் திடலில் அமைக்கப்பட்டிருந்த **Gota go Gama** கிராமத்தையே — துடைத்து அழித்து விட்டார். 'வேண்டுமென்றால், அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் இடத்தில் போய்க் குந்தியிருந்து கொண்டு போராடுங்கள்' என்று பெருமனதோடு சொல்லியிருக்கிறார் பெருமானார்.

இதெல்லாம் தப்பு. போராடுவது மக்களின் ஜனநாயக உரிமை. அவர்களுடைய போராட்டத்துக்கு இடமளிக்க வேண்டும்'' என்று சொன்ன அமெரிக்கத் தூதரைக் கூப்பிட்டு, உங்களுடைய வெள்ளை மாளிகைக்கு முன்னால் இப்படி யாராவது நின்று சத்தம் போட்டால் அவர்களுக்கு கேக்கும் ஐஸ்கிறீமுமா கொடுப்பீர்கள்?'' என்று கேட்டிருக்கிறார். (இதொரு அரசியல் நாடகம் என்பது பிந்திய நாட்களில் நடந்த காட்சிகள் நிரூபிக்கின்றன. இப்பொழுது அமெரிக்கத் தூதுவரும் ஜனாதிபதியும் மிக அந்நியோன்னியமாக உரையாடிக் கொண்டிருக்கின்றனர்).

பிரதமராக இருந்தபோது போராடுவது மக்களின் உரிமை. எவரும் தாராளமாகப் போராடலாம் என்று ஒரு மாதத்துக்கு முன்பு திருவாய் மலர்ந்த இந்த லிபரல் ஜனநாயகவாதி, ஜனாதிபதியானவுடன் ஜனநாயக வழிப்போராடிகளுக்குச் சிறைக் கதவுகளை அல்லவா திறந்து விட்டிருக்கிறார்! மட்டுமல்ல, அநாமதேயக் கொலைகள் வேறு நடக்கின்றன நடத்தப்படுகின்றன.

கடந்த ஒரு மாதத்துள் மட்டும் 21 கொலைகள் நடந்துள்ளன என்று பொலிஸ் விவரங்கள் சொல்கின்றன. இந்தக் கொலைகளை நடத்தியவர்களில் யாருமே கைது செய்யப்படவும் இல்லை. அடையாளம் காணப்படவும் இல்லை. எல்லாமே இனந்தெரியாதவர்களால் நடத்தப்பட்டவை என்பது தான் சிக்கலுக்குரியது. இப்படியான கொலைகள் தான் முன்பும் நடந்தன நடத்தப்பட்டன. இது போராடுவோருக்கு எச்சரிக்கை விடுக்கும் அரச வழிமுறையாகும். இனி வரும் காலத்தில் இது பெரிய விபரீதங்களையெல்லாம் உண்டாக்கப் போகிறது என்று தெரிகிறது.

இதேவேளை 'அரகலய' போராட்டக்காரர்களை 06.08.2022இல் அழைத்து நல்லுபதேசத்தை வழங்கியிருக்கிறார் விக்கிரமாண்டேஸ்வரப் பெருமான். இந்தச் சந்திப்பில் இளைய தலைமுறையினரின் எண்ணங்களைப் பரிசீலிக்கிறோம். எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு அரசியலில் உரிய இடமளிக்கப்படும் என்றிருக்கிறார். இது அரகலயவினரின் கோபத்தைத் தணிப்பதற்கான உத்தி. இந்த உத்தியில் அவர் கணிசமான அளவுக்கு வெற்றியும் அடைந்துள்ளன. இதற்கொரு சிறந்த உதாரணம், ஓகஸ்ற் 09இல் அடுத்த எழுச்சி நடக்கும் என்றிருந்த நிலையை அப்படியே உறங்கு நிலைக்குத் தள்ளி விட்டார் விக்கிரமசிங்க.

இதொன்றும் புதியதல்ல. 1977இல் மாமனார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா செய்தவை தான். அந்த வழியை மருமகன் ரணில் வெற்றிகரமாகத் தொடர்கிறார். அவ்வளவு தான்.

ஜே.ஆர். 1977இல் ஆட்சியதிகாரத்துக்கு வந்தவுடன் செய்தது ஜனநாயக அரங்கை முடியதேயாகும். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்தையும் அவருடைய அணியையும் நாட்டை விட்டுக் கலைத்தார். சிறிமா பண்டாரநாயக்கவின் குடியுரிமையைப் பறித்தார். ஜனநாயக வழியில் போராடிய தமிழ் இளைஞர்களை வகை தொகையின்றிக் கைது செய்து சிறையிலடைத்தார். பிறகு சிறைச்சாலைக் கலவரத்தை உருவாக்கி அவர்களைக் கொன்றார். ஊர்களை படைகளைக் கொண்டு எரித்தார். படை நடவடிக்கைகளின் மூலம் படுகொலை அரங்குகளைத் திறந்தார். ஊடக சுதந்திரத்தை தணிக்கையின் மூலம் அச்சுறுத்தினார். அவசரகாலச்சட்டம், ஊரடங்குச் சட்டம், பயங்கரவாதச் சட்டம், புலித்தடைச் சட்டம் எனப் பல சட்டப் பூட்டுகளால் சமூகத்தை முடக்கினார். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி என்றால் அடக்குமுறை அதிகாரத்தை உச்சமாகப் பயன்படுத்துவதே. இதன் ஒரு அம்சமாக அமைச்சர்களின் ராஜினாமாக் கடிதத்தை வாங்கித் தன்னுடைய சட்டைப் பைக்குள் வைத்திருப்பது

**கட்டுரையாளர்:**
**கிளிநொச்சியில் இருந்து**
**- கருணாகரன் -**



என்பது வரையில் எதையும் எப்படியும் செய்ய முடியும் என்று வில்லங்கமான காரியங்களையெல்லாம் செய்து அந்தப் பதவியை அதிகாரத்தைப் பரிசோதித்துப் பார்த்தார்.

இப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவும் இதே வழியில், ஜே.ஆரைப் போலச் சில பரிசோதனைகளைச் செய்ய முயற்சிக்கிறார் என்றே தெரிகிறது. தன்னுடைய அதிகாரத்துக்கு முன்னே எதிர்த் தரப்பு என்று எதுவுமே இருக்கக் கூடாது என்ற விதமாகச் சிங்க செயற்படுகிறார். இதற்காக அவர் வகுத்திருக்கும் பத்ம விபூகமே சர்வகட்சி ஆட்சியாகும். இந்தப் பொறியில் யாரும் சிக்காதிருக்க முடியாது. அப்படிச் சிக்காதவர்கள் மக்கள் விரோதிகள். மக்கள் துயர் தீர்ப்பதில் அக்கறையில்லாதவர் என்றொரு படத்தைக் காட்டுவதற்கு ரணிலுக்கு வாய்ப்பாகி விட்டது.

பொருளாதார நெருக்கடி என்ற தேசியச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வராதவர்கள், ஒத்துழைக்காதவர்கள் எல்லாம் கறுப்பாடுகள் என்று மக்களுக்குக் காட்டுவதற்கு ரணிலுக்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.


இதனால் தான் சஜித் பிரேமதாசா தொடக்கம் சம்மந்தன் வரையில் விருப்பமில்லாமலே கொடி காட்ட வேண்டி வந்திருக்கிறது. (இவர்களுடைய களுத்தில் நுகத்தடியை பிராந்திய சக்தியும் மேற்குலகும் ஏற்றி வைத்துள்ளன) ஏற்கனவே தங்கள் விருப்பத்துக்கு அப்பால் நின்றே ரணிலை ஆதரித்து, அனுசரித்துப் போக வேண்டி வந்தது ராஜபக்ஸக்களுக்கு. இப்பொழுது அந்த நிலை வந்திருக்கிறது மற்ற ஆட்களுக்கும். ஆகவே கொஞ்சக் காலத்துக்கு இலங்கையில் எதிர்க்கட்சியோ எதிரணிகளோ இல்லை என்ற நிலையே நீடிக்கப் போகிறது. ஜே.ஆர். பெற்ற வெற்றியைப் போல ரணிலும் இதில் வெற்றியடைய முயற்சிக்கிறார். அதாவது எதிர்த்தரப்பு இல்லாத ஆட்சியொன்றை ரணில் நிறுவப் போகிறார்.

ஆக மொத்தத்தில் எல்லோராலும் தோற்கடிக்கப்பட்ட விக்கிரமசிங்க, இப்பொழுது எல்லோரையும் தோற்கடித்துக் கொண்டிருக்கிறார் என்றே கூற வேண்டும். இதுதான் தலைகீழ் மாற்றம் என்று சொல்வது. இலங்கையில் அரசியல் மாற்றம், ஆட்சி மாற்றம், பிரச்சினைகளில் மாற்றம் (தீர்வு) எல்லாம் வந்திருக்கிறதோ இல்லையோ, தலைகீழ் மாற்றம் மட்டும் தப்பாமல் நிகழ்ந்திருக்கிறது. அப்படியான ஒன்றுதான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி விரட்டப்பட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டவர் ஜனாதிபதியாக்கப்பட்டிருக்கிறார். (அரசியலமைப்பின்படி தான் தான் தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன் என்று ரணில் சொன்னாலும் நிஜ உண்மை

(22ம் பக்கம் பார்க்க)

# சீனா எதிர் கொள்ளும் சவால்!

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி, சர்வதேச ரீதியாக சீனாவுக்கு சவாலான நிலையை தோற்றுவித்திருக்கிறது.

கொரோனா தொற்று மற்றும் உக்ரேன் மீதான படையெடுப்பு என்பன இந்த நெருக்கடிக்கு முக்கியமான காரணங்களாக சொல்லப்பட்டாலும், அதற்குப் பின்னால் பல காரணிகள் இருப்பது உண்மை.

அந்தக் காரணிகளில் ஒன்று இலங்கைக்கு கட்டுப்பாடற்ற வகையில் சீனா வழங்கிய கடன்கள் ஆகும். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் தான், இலங்கைக்குள் சீனா வலுவாக நுழைய ஆரம்பித்து.

2007இல்அம்பாந்தோட்டை துறைமுக கட்டுமானத்தில் ஆரம்பித்த இந்த உறவு, நுரைச்சோலை அனல்மின் திட்டம், மத்தள விமான நிலைய திட்டம், நெடுஞ்சாலை அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் மைதானங்கள், அரங்குகள் என பரந்துபட்ட அளவில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இவை அனைத்தும் சீனாவிடம் பெறப்பட்ட கடன்களினால் தான் சாத்தியமாகின. வெளிப்புறத் தோற்றத்துக்கு இவை இலங்கையின் மிகப் பெரிய அபிவிருத்தியாக தோற்றத்தைக் காண்பித்தாலும், முதலீட்டுக்கு ஏற்ற வருமானத்தை தருவதாகவும் இருக்கவில்லை.

கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடிய திறனையும் உருவாக்கவில்லை. இது தான் முதல் பிரச்சினை. ஒரு திட்டத்தில் முதலீடு செய்யும் போது, கடனை அடைப்பதற்கு போதிய வருமானம் கிடைக்குமா என்று, கணக்கிட வேண்டும்.

அது சாத்தியப்படாது போனால், அந்த திட்டத்தையும் செயற்படுத்த முடியாமல் போகும், மோசமான கடன் பொறிக்குள் சிக்கிக் கொள்ளவும் நேரிடும்.

இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்கள் சீனாவிடம் வரம்பின்றிப் பெற்ற கடன்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்த முடியாமல் போன போது, பொருளாதார நெருக்கடி ஆரம்பித்து விட்டது.

கடனைச் செலுத்த கடனை வாங்கிக் கொள்ளத் தொடங்கிய போது கூட, நெருக்கடி மோசமடையவில்லை. நாளாந்த இறக்குமதிகளுக்குத் தேவையான டொலர் முற்றாக வற்றிப்போகும் நிலை ஏற்பட்ட போது, கூடவே சுற்றுலா வருமானமும் படுத்து, உக்ரேன் போர் நெருக்கடியும் தீவிரமடைந்த போது தான், நிலைமை சிக்கலானது.

இலங்கையின் மொத்த கடன் தொகையில் 10 சதவீதம் மட்டுமே சீனாவுக்கு வழங்கப்பட வேண்டியது என்றும், சீனாவின் கடன் பொறி என்பது மேற்குலகின் பொய்யான பிரசாரம் என்றும் அண்மையில் கம்போடியாவின் தலைநகர் நொம்பென்னில் இலங்கை மற்றும் சீன வெளிவிவகார அமைச்சர்கள் சந்தித்துப் கொண்ட போது கூட வலியுறுத்தப்பட்டது.


இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சீனாவின் 'கடன்பொறி' என்ற குற்றச்சாட்டை நிராகரித்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

நல்லாட்சி அரசின் காலத்தில், நிதியமைச்சராக ரவி கருணாநாயக்க இருந்த போது, கடன்பொறிக் குற்றச்சாட்டை முதன் முதலில் முன்வைத்திருந்தார்.

பின்னர் சில மாதங்களிலேயே சீனாவின் அழுத்தங்களைச் சமாளிக்க முடியாமல் அவர், அந்த நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கும் நிலை ஏற்பட்டது.







இப்போதும் சீனாவின் பொருளாதார அழுத்தங்களால் தான், கடன் பொறிக் குற்றச் சாட்டை இலங்கை மறுத்து வருகிறது. தன்னிடம் கடன் பெற்ற நாடுகள் நிதி நெருக்கடியில் சிக்கிக் கொள்ளும் போது கூட, சீனா இரக்கத்துடன் நடந்து கொள்ளவில்லை.

இலங்கையிடம் இருந்து கடைசி வரை தனக்கு கிடைக்க வேண்டிய கடன் தொகையை திரும்ப பெறுவதிலேயே கவனம் செலுத்தியது.

இப்போது மீண்டும் மீண்டும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டாலும், சர்வதேச நாணய நிதியம் கூட சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு ஒன்றை எட்டுமாறு கூறிய போதும், சீனா அதற்கு சரியான பதிலை அளிக்கவில்லை. நெருக்கடியில் சிக்கிய நாடுகளைக் காப்பாற்ற சீனா முன் வரவில்லை. இதுவே அதன் பாரம்பரியமாக மாறி வருகிறது.

வளர்ந்து வரும் நாடுகள் சீனாவின் பாதை மற்றும் அணை முன்முயற்சியின் மூலம் அதிக கடன்களைப் பெறுவது குறித்து ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும்'' என்று சில நாட்களுக்கு முன்னர், பங்களாதேஷின் நிதியமைச்சர் ஏ.எச்.எம். முஸ்தபா கமால் எச்சரித்திருக்கிறார்.

உலகளாவிய பணவீக்கம் மற்றும் வளர்ச்சி குறைந்து வருவதால் கடனில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளின் சந்தைகளில் அழுத்தங்கள் அதிகரிக்கின்றன அவர் கூறியிருக்கிறார்.

எல்லோரும் சீனாவைக் குற்றம் சாட்டுகிறார்கள். சீனா அதற்கு உடன்பட மறுக்கிறது. ஆனால் இது அவர்களின் பொறுப்பு.

எந்தெந்த திட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் சீனா போதுமான அளவு கடுமையாக இருக்கவில்லை என்பதை இலங்கையின் நெருக்கடி எடுத்துக் காட்டுகிறது.

ஒரு திட்டத்திற்கு கடன் கொடுப்பதற்கு முன்முழுமையான ஆய்வு' செய்ய வேண்டும்.

இலங்கைக்குப் பின்னரும் இந்த குறிப்பிட்ட அம்சத்தை சீன அதிகாரிகள் கவனிக்கவில்லை என்று நாங்கள் உணர்ந்தோம், இது மிகமிக முக்கியமானது என்றும் பங்களாதேஷ் நிதியமைச்சர் இந்தியாவின் பினான்சியல் ரைம்ஸ் செவ்வியில் குறிப்பிட்டிருக்கிறார்.

சீனாவின் பொறுப்பற்றதனம், நாடுகளைப் பொறியில் தள்ளுகிறது என்ற குற்றச்சாட்டை மேலும் வலுப்படுத்துகிறது இவரது கருத்து.

இலங்கை மாத்திரமன்றி, பாகிஸ்தானும், இதே கடன் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. அது போல பங்களாதேசும் ஆபத்தான நிலையை எதிர்கொள்ள வேண்டி வரும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஆபிரிக்கா தொடங்கி, கிழக்காசியா வரையாக பல நாடுகள் சீனாவின் கடன்பொறிக்குள் சிக்கியிருக்கின்றன. இந்தக் கடன்பொறியை சீனா அபிவிருத்தி என்ற போர்வையில் தான் முன்வைக்கிறது. ஆனால் அவை செயற்திறன் வாய்ந்த திட்டங்களாக இருக்க வேண்டும் என்பதில் சீனா ஒரு போதும் கவனம் செலுத்தவில்லை.

அல்லது அந்த திட்டங்கள் தங்களின் எதிர்கால நலன்களுக்கு ஏற்றவையாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் கவனத்தில் கொள்கிறது.

பங்களாதேஷ் நிதியமைச்சரின் கருத்து, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ரவி கருணாநாயக்க வெளியிட்ட கருத்துடன் ஒத்துப் போகிறது. ஆனால் அப்போது சீனாவிடம் இருந்து முழுமையாக விலகிக் கொள்ள முடியாத நிலையில் இலங்கை இருந்ததால், ரவி கருணாநாயக்க சில வாரங்களிலேயே பீஜிங்கிடம் சரணடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்த நிலை பங்களாதேஷ் நிதியமைச்சருக்கு வராது என்று கூறமுடியாது. ஆனாலும், சீனாவைப் பொறுத்தவரையில் இலங்கையின் கடன் நெருக்கடி அதற்கு கடுமையான சவாலாகவே மாறி வருகிறது என்பதை அவரது கருத்து உணர்த்துகிறது

சீனாவின் கடன்பொறி தொடர்பாக சர்வதேச அளவில் இப்போது தீவிர பிரசாரம் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு இலங்கை உதாரணமாக காட்டப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சீனாவைப் பொறுத்தவரையில் முக்கியமானதொரு கேந்திரமாக இருந்தாலும், அதனை கடன்பொறியில் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு, கடன் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கு இன்று வரை இணங்கவில்லை.

இது ஏனைய நாடுகளை ஏமாற்றம் அடைய வைத்திருக்கிறது.

பங்களாதேஷ் போன்ற நாடுகளின் எச்சரிக்கைகள் அந்த நாடுகளின் வயிற்றில் புளியைக் கரைக்கும் நிலையை உருவாக்கியிருக்கிறது.

இது சீனாவின் பூகோள அரசியல் நிலையை மாத்திரமன்றி பொருளாதார அபிவிருத்தியையும் பாதிக்கும்.

ஏனென்றால் சீனாவின் பொருளாதாரம், தற்போது, உள்நாட்டில் மட்டும் கட்டியெழுப்பப்படவில்லை. கடன்பொறி இராஜதந்திரம், மற்றும் கடல்கடந்த திட்டங்களினாலும், கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சர்வ கட்சி அரசாங்கத்தின் தோல்வி!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-K.T.கணேசலிங்கம்-





இலங்கைத்தீவின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் சுமூகமான சூழலை தோற்றுவிக்கும் அடையாளம் இணங்கானப்படுகின்றது. ஆனால் அத்தகைய வெளித் தோற்றத்தின் உள்ளார்ந்த வடிவம் அதிக நெருக்கடியும் சவால்களுமிக்கதாக காணப்படுகின்றது. ஜனாதிபதி ஒரு கட்சியை சார்ந்தவராகவும் ஆட்சியதிகாரம் இன்னொரு கட்சி சார்ந்ததாகவும் காணப்பட்ட சூழல் முழுவதும் இலங்கைத்தீவின் அரசியல் குழப்பகரமானதாகவே காணப்பட்டுள்ளது.

அதற்கான அரசியல் கலாசாரத்தை இலங்கைத்தீவு இன்னுமே எட்டவில்லையெனக் குறிப்பிடலாம். நாகரிகமானதொரு அரசியல் கலாசாரத்தை இலங்கைத்தீவில் அடையாளம் காண்பது கடினமாகும். இக்கட்டுரையும் புதிய ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்ட சர்வசட்சி அரசாங்க நிலை பற்றி உரையாட முனைகிறது.

புதிய ஜனாதிபதியின் கட்சி அரசியல் கட்சியின் இருப்புக்கான தோற்றப்பாடு தோல்வியடைந்ததொன்றாகவே காணப்படுகின்றது. இதனால் பொதுஜன பெரமுனாவை மையப்படுத்தியே அரசாங்கம் ஒன்றை கட்டவேண்டிய தேவைப்பாடு எழுந்த போது காலிமுகத்திடல் போராட்டத்தையும் பொதுமக்களின் அதிருப்தியையும் கையாளும் நோக்கில் சர்வகட்சி அரசாங்கத்தை புதிய ஜனாதிபதி முன்மொழிந்திருந்தார்.

அத்தகைய முன்மொழிவுக்கு பின்னால் பொதுஜன பெரமுனாவின் எழுச்சி ராஜபக்ஷ பரம்பரையின் மீளெழுச்சி ஐக்கிய தேசிய கட்சியின் மீளுருவாக்கம் காலிமுகத்திடல் போராட்ட தோற்கடிப்பென பல பரிமாணங்களை கொண்டு திட்டமிடப்பட்டது. ஆனால் அத்தகைய உபாயத்தை ஏனைய அரசியல் கட்சிகள் புரிந்து கொண்டதோடு அதற்கான மாற்று திட்டமிடல்களையும் எதிர் வினைகளையும் ஆற்ற தொடங்கியது. அதனால் சர்வகட்சி அரசாங்கம் தனது ஆரம்ப கட்டத்திலேயே அதிக எதிர்ப்புக்களை சந்திக்க தொடங்கியது.

இரண்டாவது, சர்வகட்சி அரசாங்கத்துக்கு மாற்றீடாக எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வெளிப்படையாக எதிர்த்ததோடு சர்வகட்சி அரசில் பங்கெடுக்காது சர்வகட்சி ஆட்சியில் பங்கெடுக்க போவதாகவும் சர்வகட்சி ஆட்சி என்ற புதிய உரையாடலை இலங்கைத்தீவில் அக்கட்சி ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. இத்தகைய திட்டமிடல் ஆரோக்கியமான ஜனநாயக அரசாங்க கட்டமைப்பையும் நிர்வாக ரீதியிலான ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்களையும் மக்களை மையப்படுத்திய ஆட்சி பாரம்பரியத்தையும் கட்டமைக்க உதவுவதாக காணப்பட்டது.

இடைக்கால ஆட்சி முறையென்பது நிர்வாக பரம்பலையும் அதிகார பரம்பலையும் சாத்தியமாக்கும் வழிமுறையென்பதை எதிர்க்கட்சி உறுதிப்படுத்த முனைகிறது. இதன் மூலம் எதிர்க்கட்சியின் இருப்பு பாதுகாக்கப்படுவதுடன் அதன் கொள்கைகள் ஜனாதிபதியையும் பொதுஜனபெரமுனவையும் பாதுகாக்கும் விதத்திலோ அதிகாரத்துக்கு கட்டுப்படும் நோக்கிலோ இயங்காது இருப்பதோடு எதிர்கால அரசியலுக்கான இலக்கை முழுமைப்படுத்த திட்டமிட்டது. அதுவே எதிர்க்கட்சியின் சர்வகட்சி ஆட்சி என்பதுவாகும். இதனை கருத்தில் கொள்ளாது சிரேஷ்ட உறுப்பினர்கள் சர்வகட்சி அரசாங்கத்தில் இணையப்போவதாக குறிப்பிட்டுள்ளனர். அதனால் எதிர்க்கட்சி பலவீனப்படுவதோடு மீண்டுமொரு ஐக்கிய தேசிய கட்சி யுகத்தை தோற்றுவிக்குமா என்ற சந்தேகத்தை உருவாக்கி உள்ளது.

மூன்றாவது, ஜே.வி.பி என அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி முற்றாகவே சர்வகட்சி அரசாங்கத்தை நிராகரித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் அழைப்பை நிராகரித்ததோடு அவரைச் சந்திக்கும் முயற்சியை முற்றாக கைவிட்டுள்ளது. காலிமுகத்திடல் போராட்டத்தை வழிப்படுத்திய தரப்புக்களில் ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் ஜே.வி.பி சர்வகட்சி அரசாங்கத்தை நிராகரித்தது என்பது அதன் தோல்விக்கான பிரதான பதிவாக உள்ளது. இதனால் சர்வகட்சி அரசாங்கம் எதிர்பார்க்கப்பட்ட உறுதிப்பாட்டையோ அல்லது அதற்கான திட்டமிடலையோ அல்லது அதற்கான வாய்ப்புக்களையோ இழந்துள்ளதென்றே கூற முடியும். ஜே.வி.பி-இன் சர்வகட்சி அரசாங்கத்துக்கான எதிர்ப்பானது காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் எதிர்ப்பாகவே கருதப்படுகின்றது.

நான்காவது தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது சர்வகட்சி அரசாங்கத்தில் பங்கெடுக்காது எனக்குறிப்பிட்டுள்ளதுடன், வெளியிலிருந்து ஆதரவளிப்பதாக குறிப்பிட்டிருந்தது. ஜனாதிபதி தேர்தலில் அதன் தீர்மானமும் உறுப்பினர்களின் நகர்வுகளும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மீதமான அதிருப்தியை தமிழ் மக்களின் மத்தியில் அதிகரிக்க வழி அமைத்துள்ளது.

இதனால் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதில் அதன் எதிர்கால தேர்தல்களும் தமிழ் மக்களின் ஆதரவும் கருத்தில் கொள்ளப்பட்டதோடு கட்சியின் தலைமைத்துவத்தின் பலவீனமும் சர்வகட்சி அரசாங்கம் பொறுத்தான முடிவுகளை சரிவர மேற்கொள்ள முடியாமைக்கான காரணமாக விளங்குகின்றது. பிரதமர் கனவோடு இருந்தவர்கள் மக்களின் எதிர்ப்புணர்வுகளாலும் அதிருப்தியினாலும் சர்வகட்சி அரசாங்கத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பின் முழுமையான தோல்விக்கு வழிவகுத்து விடுமென்று கருதுகிறார்கள். வடக்கு கிழக்கில் புதிய தலைமைகள் மற்றும் புதிய அரசியல் கட்சிகள் பற்றிய உரையாடல்கள் மேலெழுந்திருப்பதோடு தமிழ்த்தேசிய கூட்டமைப்பை புனரமைப்பு செய்ய வேண்டுமென்ற விவாதங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாவது, தனி ஒரு பாராளுமன்ற உறுப்பினராக தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் மக்கள் விடுதலை கூட்டணியின் செயலாளர் விக்கினேஸ்வரன் அவர்கள் கூட்டரசாங்கத்தில் இணைவதற்கு நிபந்தனைகளை முன் வைத்தார். இவ்வாறு நிபந்தனைகளை இரு பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் முன் வைத்ததோடு விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு வாக்களித்ததோடு அவருடனான உரையாடல்களில் தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைத்து செயற்படுகின்றனர். அவரது அணுகுமுறை ஜனாதிபதியாகி நிறைவேற்றும் பட்சத்தில் சர்வகட்சி அரசாங்கம் இணைந்து பயணிப்பதில் வெளிப்படையான உரையாடல்களை முன்வைத்து வருகின்றது.

ஆறாவது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி அரசாங்கம் பற்றிய உரையாடலை முன்வைக்கின்ற போது ஆதரித்ததொரு தரப்பாக பொதுஜன பெரமுனாவே காணப்படுகின்றது. பொதுஜன பெரமுனவின் ஆதரவே ஜனாதிபதியின் சர்வகட்சி அரசாங்கத்தின் முன்னெடுப்பின் தோல்வியாக கருதப்படுகின்றது. காரணம், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட பொதுஜன பெரமுனவே சர்வகட்சி அரசாங்கத்திலும் அதிகாரத்தை செலுத்தப்படுகிறதெனவும் சர்வகட்சி அரசாங்கமும் பொதுஜன பெரமுனவின் அரசாங்கமாகவும் கருதும் நிலை இருதரப்பாலும் புரிந்து கொள்ளப்படுகின்றது. இதனாலேயே சர்வகட்சி மீதான அதிருப்தியை அனைத்து கட்சிகளும் முன்வைப்பதற்கான காரணமாக விளங்குகின்றது. அவ்வகை அரசாங்கம் சாத்தியப்படுமாயின் மீண்டும் பொதுஜன பெரமுனவின் செல்வாக்கும் ராஜபக்ஷ குடும்பத்தின் மீளெழுச்சியும் மேலோங்குவதற்கான வாய்ப்புள்ளதாக எதிர்க்கட்சிகள் கருதுகிறது.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் சர்வகட்சி அரசாங்க எண்ணம் பொதுஜன பெரமுன கட்சியின் நடவடிக்கையால் தோற்கடிக்கப்பட்டுள்து. பொதுஜனபெரமுனவுக்கு கட்டுப்பட்டு இயங்கும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் மீள்வருகையையும் மகிந்த ராஜபக்ஷவின் மீளெழுச்சியையும் சாத்தியப்படுத்த உதவுமென்றே கருதப்படுகின்றது. எனவே இலங்கைத்தீவின் வெளிநாட்டு கொள்கை மட்டுமன்று உள்நாட்டு கொள்கையும் அதன் விருப்பும் பாரிய சவாலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. சர்வகட்சி அரசாங்கத்தின் தோல்வி பொதுஜன பெரமுனவின் அணுகுமுறையால் உருவாக்கியுள்ளது.


புனிதபூமி அன்பு இல்லம்
423 குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
10வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
23 ஒக்டோபர் 2022 ஞாயிறு
தொடர்புகளுக்கு 416 841 9600
(விபரங்கள் அடுத்த வாரம்)

# தமிழர் அரசியலில் எதிர்காலத்திற்கான தந்திரோபாயம்?





கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-யசீந்திரா -



யுத்தம் முடிவுற்று 12 வருடங்களாகின்றன. இந்த பன்னிரு வருடங்களில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாம் விவாதித்திருக்கின்றோம். ஏராளமான கட்சிகள் உதயமாகியிருக்கின்றன. சிவில் சமூகக் குழுக்கள் பற்றி விவாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் முன்னேற்றங்கள் என்னவென்று நோக்கினால் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயங்கள் இல்லை. சில நம்பிக்கைகளோடு மட்டுமே காலம் நகர்ந்திருக்கின்றது.

இப்போதும் நகர்கின்றது. இந்த நம்பிக்கைகள் சரியானவையா? இந்த நம்பிக்கைகள் வெற்றி பெறும் என்பதற்கான உத்தரவாதம் என்ன? ஒரு வேளை நம்பிக்கைகள் தோல்வியடைந்தால் அடுத்தது என்ன? இவ்வாறான கேள்விகளுக்கு தமிழில் எவரிடமும் பதில் இல்லை. பதில் இருக்கவும் முடியாது.

ஏனெனில், எதிர்காலத்தை துல்லியமாக எவராலும் மதிப்பீடு செய்ய முடியாது. குறிப்பாக பலம் பொருந்திய நாடுகளின் நலன்களுக்கான ஆடுகளத்தில் என்ன நிகழும்? அவைகள் எவ்வாறான அரசியல் மாற்றங்களை உலரில் ஏற்படுத்தும்? என்பதை எவராலும் துல்லியமாக கணிக்க முடியாது.

அதாவது, புவிசார் அரசியல் போக்குகளை எவருமே கணிக்க முடியாது. ஏனெனில் அது தொடர்பில் எவரிடமும் போதிய தகவல்கள் இல்லை . இதன் காரகமாகத் தான் பலம் பொருந்திய நாடுகள், எப்போதுமே தங்களின் இராணுவ ஆற்றலை பெருக்கிக் கொள்கின்றன. இராணுவத்தை நவீனப்படுத்துகின்றன. ஆயுதங்களின் ஆற்றலை பெருக்குகின்றன. ஏனெனில், சர்வதேச கட்டமைப்பில் ஒரு பலம் பொருந்திய நாட்டின் உள் நோக்கத்தை பிறிதொரு நாட்டால் ஒரு எல்லைக்கு மேல் அறிந்து கொள்ள முடியாது. இந்த அடிப்படையிலிருந்து தான் அனைத்து விடயங்களும் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்த அறிவிலிருந்து எங்களுடைய நம்பிக்கைகளை நோக்குவோம். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடாக சில நன்மைகள் வரும். இது ஒரு நம்பிக்கை தமிழ் மக்களுக்கு எதிராக இடம் பெற்ற அநீதிகளை சர்வதேச குற்றவியல் நீதியன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டது ஒரு இனப்படுகொலை என்பதை நிரூபிக்க முடியும்.

அதில் வெற்றி பெற்றால் தமிழ் மக்கள் பிரிந்து செல்வதற்கான நியாயம் சர்வதேசளவில் ஏற்றுக் கொள்ளப்படும். இது இன்னொரு நம்பிக்கை. சீனாவின் விஸ்தரிப்பு வாதம் தொடர்பில் இந்தியா கவலை கொண்டிருக்கின்றது. இந்தியாவிற்கு வேறு வழியின்றி தமிழப் பிரச்சினையை கையிலெடுக்க வேண்டிய தேவையேற்படலாம். இது இன்னொரு தரப்பின் நம்பிக்கை.

பொதுவாக நம்பிக்கைகள் என்பவை வெறும் அனுமானங்கள் மட்டும் தான். எப்போதுமே, ஒரு நம்பிக்கையை வெளியிடுகின்ற போது, அதன் எதிர்நிலை வாதங்களிலேயே கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஒரு வேளை நடக்கா விட்டால் என்ன செய்வது? தாரணமாக, சர்வதே குற்றவியல் நீதிமன்றத்தில் விடயங்கள் நிராகரிக்கப்பட்டால் என்ன செய்வது?

பிரிக்க நாடுகளில் இடம் பெற்ற, போர்க் குற்றங்கள் தொடர்பான சில வழக்குகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில், போதிய ஆதாரங்கள் இல்லையென்னும் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழர் விடயத்திலும் அப்படி நடந்தால் என்ன செய்வது? எனவே அரசியலில் தந்திரோபாயாங்களை வெறும் அனுமானங்களின் அடிப்படையில் வகுப்பது சரியானதா அல்லது இருப்பதை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு, வாய்ப்புகளுக்காக காத்திருப்பது சரியானதா?

வாய்ப்புகளுக்காக காத்திருப்பது என்பது அடிப்படையில் ஒரு சமூகம் தன்னை சதா தயார்படுத்திக் கொள்வது. டார்வினிய அணுகுமுறையில் எந்த உயிரி தன்னை தயார்படுத்திக் கொள்கின்றதோ, அதுவே நிலைக்கும். அதாவது வெற்றி பெறும். அதுவே அதற்கான பிழைத்தல் எனப்படும்.

தமிழர் அரசியலில் தக்கண பிழைத்தல் தொடர்பான உரையாடல்களை காண முடியவில்லை. வெறுமனே அனுமானங்களிலேயே காலம் கரைகின்றது. தங்களின் அனுமானங்கள் தோல்வியில் முடிந்தால் என்ன செய்வதென்னும் பார்வை எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை

1949இல், இலங்கை தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து நாம் சமஸ்டிக் கோரிக்கையை முன் வைத்து வருகின்றோம். 70 வருடங்களுக்கு மேல், இந்த இடைப்பட்ட காலத்தில் மிதவாத அரசியல், ஆயுதப் போராட்ட அரசியல் ஆகிய இரண்டு வழிகளிலும் தமிழர்கள் முயற்சித்திருக்கின்றனர்.

ஆனாலும் 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தாண்டி ஒரு இஞ்சி கூட முன்னேற முடியவில்லை. ஏன்? விடுதலைப் புலிகள் தலைமையில் இடம் பெற்றது போன்றதொரு ஆயுதப் போராட்டம், அரசு சாரா ஆயுத அமைப்புகளின் வரலாற்றிலேயே இடம்பெற்றதில்லை. அந்தளவிற்கு உச்சமானது. ஆனாலும் விடுதலைப் புலிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டிருக்கின்றனர். நாம் இப்போது, எவரையெல்லாம் நோக்கி நம்பிக்கையை விதைத்து வருகின்றோமோ, அவர்களின் ஆதரவுடன் தான் புலிகள் நிர்மூலமாக்கப்பட்டனர். நோர்வேயின் சமாதான முன்னெடுப்புகளை பலவீனப்படுத்தியதில், அமெரிக்காவின் பயங்கரவாதம் தொடர்பான கொள்கைக்கு பிரதான பங்குண்டு. அந்தத் தொல்கையே மறு புறத்தில், புலிகளை வீழ்த்துவதற்கு ராஜபக்ட்க்களுக்கு உதவியது.

இந்த அனுபவங்களிலிருந்து சிந்தித்தால், தமிழர் அரசியலில் எதிர்காலத்திற்கான தந்திரோபாயம் என்று ஒன்று இருக்க முடியுமென்றால், அது நிச்சயம் இருப்பதை உச்சளவில் பயன்படுத்திக் கொண்டு, முன்னேறுவதாக மட்டுமே இருக்க முடியும். வெறும் அனுமானங்கள் ஒருபோதும் அரசியல் தந்திரோபாயமாக இருக்க முடியாது.

# புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் எல்லை மீறினால் மீண்டும் தடை!

தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவை மீண்டும் தடைப் பட்டியலில் சேர்க்கப்படும் என்று ஆளுங் கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு, அக்கட்சியின் தலைமையகத்தில் புதன்கிழமை 17 ஆகஸ்ட் 2022 நடைபெற்றது.

இதன் போது சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் நபர்கள் மீதான தடை நீக்கம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மொட்டுக் கட்சி எம்.பியான ஜகத் குமார இவ்வாறு குறிப்பிட்டார். உரிய ஆய்வுகளின் பின்னரே, சில அமைப்புகள் மற்றும் நபர்களை தடைப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்வதற்கான பரிந்துரையை பாதுகாப்பு அமைச்சு முன் வைத்துள்ளது. இதில் எவ்வித தவறும் கிடையாது. நாம் உலகுடன் இணைந்து பயணிக்கவேண்டும். தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அமைப்புகள் நாட்டுக்கு நேசக்கரம் நீட்டலாம். குறைந்த பட்சம் வடக்கு, கிழக்கை யாவது மேம்படுத்த உதவலாம்.

சிலவேளை அவ்வமைப்புகள் எமது நாட்டுக்கு, சட்டத்துக்கு எதிராக செயற்பட்டால் மீண்டும் தடை செய்யமுடியும். அதற்கான ஏற்பாடுகள் உள்ளன எனவும் ஜகத் குமார எம்.பி. சுட்டிக்காட்டினார்.


இதேவேளை நியாயமற்ற முறையில் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தால் அவற்றை நீக்க வேண்டும் என சுயாதீனப் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கடந்தக் காலங்களில் கொண்டிருந்த கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால், அவர்கள் நாட்டுக்கு டொலர்களைக் கொண்டுவந்தாலும் வராவிட்டாலும் அந்த அமைப்புகள் மீது நியாயமற்ற முறையில் தடை விதிக்கப்பட்டிருந்தால் அவற்றை நீக்குவதில் பிரச்சினை இல்லை எனவும் தெரிவித்தார்.


ஆனால், டொலரையும் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கத்தையும் முடிச்சுப் போட முடியாது. அவ்வாறு செய்யும் பட்சத்தில், தேசியப் பாதுகாப்பை விட டொலரே முக்கியமான ஒன்றாக தோன்றும் எனவும் தெரிவித்தார். இது இவ்வாறிருக்க தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தமையால் தான் தடைப்பட்டியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், அடையாளம் காணப்பட்ட தனிநபர்களும் சேர்க்கப்பட்டனர். தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தாமல், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவும், ஜெனிவா மாநாட்டைச் சமாளிக்கவுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடை நீக்கம் என்ற இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். அவரின் இந்த ஏமாற்று நாடகத்துக்கு சர்வதேசமும் பலியாகப் போகின்றது. இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.


மண்ணிற்காக மடிந்தவர்களை மறந்து வாழ்வதில் அர்த்தமில்லை
Toronto Blues
SPORTS CLUB
TORONTO BLUES SPORTS CLUB CANADA SINCE 1986
சமர்கள நாயகர்கள் பிரிகேடியர் பால்ராஜ் பிரிகேடியர் துர்கா பிரிகேடியர் சொர்ணம் பிரிகேடியர் விதுஷா பிரிகேடியர் தீபன்
ஆகியோரின் நினைவு வெற்றிக்கிண்ணத்திற்கான உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி
காலை 10 மணி முதல்...
AUG 27 SAT
Special
Best Player
Best Defence
Best Keeper
MVP
36வது ஆண்டு
தியாகதீபங்கள் 2022
மாவீரர்கள் நினைவாக மின் ஒளியில்
நடைபெறும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி
2020 COVID 19
2021 COVID 19
நான் உயிருக்குயிராக நேசித்த தோழர்கள். என்னோடு தோளோடு
தோள் நின்று போராடிய தளபதிகள் நான் பல்லாண்டு காலமாக
வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழும் போதெல்லாம் எனது
இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து
போவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு
மேலும் உரமூட்டியிருக்கின்றன.
- மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்
ஈழவிடுதலை போரில் உயிர்நீத்த மாவீரர்களையும் அப்பாவிப்பொது மக்களையும் நினைவு கூரும் முகமாக அனைத்து
தமிழ் உறவுகளையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்
Centennial Stadium - 56 Centennial Park Rd, Etobicoke, ON M9C 3T3
TRONTO BLUES: 647.539.3303 | torontoblues1986@gmail.com
2020,2021 கோவிட் தோற்று நோய் காரணமாக மண்ணிற்காக மடிந்த மாவீரர்களின் நினைவாக நடத்தப்படுகின்ற
போட்டி நடத்த முடியாமல் போய்விட்டது என்பதை இட்டு அந்த மாவீரர்களிடம் மண்டியிட்டு மன்னிப்பு கோரு கின்றோம்
RSM
OPENING SOON
RSM ENTERPRISES INC
Century 21
Affiliate Realty Inc.
Visva Vythilingam
Kestrel Bakery
Sri Lankan, North & South Indian Take-Out & Catering
4-5010 Steeles Avenue West, (Kipling & Steeles)
Etobicoke, ON M9V 5C6
Tel: (416) 744-7279
Vishnu Sivaraman
Sales Representative
416.805.3085
Vishnusiva@vishnuhomes.ca
vishnu homes realtor
Amazing Electric Motors Ltd.
WINNER STAFFING SOLUTION
PRABHU
CENTUM Advance Realty Inc.
Thusi Sivarajah
Mortgage Consultant
416.837.1549
BEST MORTGAGE RATE IN TOWN
UTHAYA'S SUPER MARKET
RE/MAX Realty Services Inc.
RUBY THAMBIAH
OFF: (905) 456-1000
DIR: (416) 999-5337
RSK R.S.K. TRADING CO
RAGU
416-992-7801
BS.KISHOR Transportation
Call Balu
647.654.3814
RE/MAX
REGINOS PIZZA
416-663-0-663
Wholesale Vegtable
Kanthaganani
416-897-1542
THE WARAN TEAM
ATHESIVAN NARAYANASAMY
(416).568.1924
Window Glass & Door Services
905-456-8433
Golumbia TONER
GV MONEY TRANSFER
Golumbia Printing
Rajan Salon
For Men & Ladies
Tel: 416 742-4665
MEGA Financial Group
Gowry Yogeswaran
ALLSTARS TRAVEL & TOURS
Tony Thaya
www.allstarstravels.com
tony@allstarstravels.com
RENT CHAIR & TABLE FOR RENT
கதிரை, மேசை, வாடகைக்கு விடப்படும்
Call : Moorthy
Res : 416.747.0495
Cell : 416.989.7666
GTA CHIROPRACTIC CENTER
Pathmaraj Ponnuthurai
President
www.gtachiro.ca
Tel: 416 321 0482
Fax: 416 321 0486

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும்.





ரிஸபராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம் நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் உண்டாகலாம்.




சிம்மராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம்.





விருச்சிகராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். கடன் கட்டுக்குள் இருக்கும்.








தனுசுராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.




மகரராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.




கும்பராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல் ாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும்.




மீனராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்னைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்களிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஆட்ட நாயகன் ரணில்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) என்னவென்று அனைவருக்கும் தெரியும்). வாய்ப்புகளை தமக்கென உருவாக்கி அவற்றைப் பயன்படுத்துவது ஒரு வகையான திறமை. அதேவேளை அபூ ர்வமாகக் கிடைக்கின்ற வாய்ப்புகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அவற்றைச் சரியாக பயன்படுத்துவது இன்னொரு வகையான திறன். நெருக்கடிக்கு முகம் கொடுப்பது, அவற்றைத் திறமையாகக் கையாள்வது, அவற்றின் ஊடே வெற்றி இலக்கைச் சென்றடைவது இன்னொரு திறமை.

மிகச் சிலரே தமக்கு வாய்ப்பான சூழலை உருவாக்குகின்றனர். அவர்களே பெரிய வெற்றியாளர்களாக, பெருந்தலைவர்களாக மாறுகின்றனர். சிலர் கிடைக்கின்ற வாய்ப்பைப் புத்திபூர்வமாகப் பயன்படுத்தி வெற்றியடைகின்றனர். பலரும் இவை இரண்டையும் தவற விடுகின்றனர். இப்பொழுது ரணில் விக்கிரமசிங்க இந்த இரண்டாவது, மூன்றாவது வழிமுறைகளுக்குச் சிறந்த உதாரணமாக மாறியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரசியல் அரங்கில் வாய்ப்புகள் அனைத்தையும் இழந்த தோற்றுப் போன ஒருவராகவே விக்கிரமசிங்க இருந்தார். அவருடைய ஐ.தே.க இரண்டாக உடைந்தது. ஒரு கட்டத்தில் கட்சித் தலைவர் பதவியைக் கூட இழக்கக் கூடிய நிலை வந்தது. மிஞ்சிய கட்சியில் ஒருவர் கூட வெற்றியடையவில்லை. ஐம்பது வருட கால அரசியல் அனுபவங்களும் தலைமைத்துவ வாய்ப்புகளும் எந்த வகையிலும் அவருக்குக் கை கொடுக்கவில்லை. ரணிலின் அரசியல் வாழ்வு முடிந்து விட்டது. அவர் ஒரு தோல்வியின் நாயகன் என்ற விமர்சனங்கள் ரணிலை நோக்கி வைக்கப்பட்டன.

இன்று இவை எல்லாவற்றுக்குமான பதிலை ரணில் அளித்துக் கொண்டிருக்கிறார். சொல்லில் அல்ல, தன்னுடைய வெற்றிகரமான செயல்களின் மூலமாக. சிக்ஸருக்கு மேல் சிக்ஸராக.

ஆம், ரணில் இப்பொழுது அதிசயமான வெற்றியாளரே. இந்த வெற்றியை அவர் இரண்டு வகையில் அறுவடை செய்ய முயற்சிக்கிறார். ஒன்று, மற்றவர்களின் பலவீனத்தைத் தன்னுடைய பலமாக மாற்றுவதன் மூலம். இரண்டாவது, தன்னுடைய மிக நுட்பமான அரசியல் ராஜதந்திர நடடிவடிக்கைகளின் மூலமாகவும்.

ஆனால், தமிழ் அரசியல் தலைமைகள் தமக்குக் கிடைக்கின்ற வெற்றிக்கான சந்தர்ப்பங்களை எல்லாம் கை நழுவ விட்டன என்பதுடன் வீண் பிடிவாதங்களாலும் புத்தியற்ற தன்மையினாலும் நாசமாக்கின. இன்னும் இதிலிருந்து மீள முடியாத நிலையிலேயே உள்ளன.

# ஸ்ரீலங்காவிற்குள் நுழையும் அமெரிக்க இராணுவ செயற்கைகோள்!

சீனாவின் உளவு கப்பலை கண்காணிக்க அமெரிக்க அரசு உயர் தொழில்நுட்ப கருவிகளை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சீன உளவு கப்பல் வந்துள்ள நிலையில், இந்திய தேசிய பாதுகாப்பிற்கு கடும் அச்சம் நிலவுவதாக இந்தியா கவலை வெளியிட்டது.

சீனாவின் உளவு கப்பல் அதி நவீன தொழில்நுட்பங்கள் கொண்டதால் தான் இருக்கும் இடத்தில் இருந்து 750 கி.மீ வரை துல்லியமாக ஆய்வு செய்யும் திறன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது, இந்தியாவின் அணுமின்நிலையம் உட்பட செய்மதி ஏவுதளமான ஸ்ரீ ஹரிகோட்டா வரை பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டது.

இதன் காரணமாக, சிறிலங்காவில் கப்பல் நிற்கும் காலப்பகுதில் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது என்பது குறித்து கண்காணிக்க உயர் தொழில்நுட்ப கருவிகளை இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது. இந்த சாதனங்கள் என்ன என்பதை அமெரிக்கா வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக இரண்டு அமெரிக்க இராணுவ செயற்கைகோள்களை ஹம்பாந்தோட்டை வான்பரப்பிற்கு அனுப்பும் பணியை அமெரிக்க பாதுகாப்பு திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே, சீனக் கப்பலின் விவகாரங்கள் குறித்து கண்காணிக்க இந்திய பெருங்கடலில் இந்தியாவின் தொழில்நுட்ப கப்பலான வீ.சி 11184 என்ற கப்பல் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன கப்பல் யுவான் வாங் 5 நங்கூரமிட்டுள்ள நிலையில், இந்தியாவின் இராமேஸ்வரம் கடலில் இந்திய கடற்படையினர் உலங்கு வானூர்திகள் மூலம் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்திகள் இராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் பகுதியில் தாழ்வாக பறந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதிநவீன கருவி கள் பொருத்தப்பட்ட குறித்த கப்பல் மூலம் தென் இந்தியாவில் உள்ள 6 கடற்படை தளங்களை இந்த உளவு கப்பலால் படம் பிடிக்க முடியும் எனவும் அங்கு என்ன வசதிகள் உள்ளன என்பதையும் தெரிந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப் படுகின்றது.

மேலும், தமிழகத்தில் கல்பாக்கம், கூடங்குளம் ஆகிய 2 இடத்திலும் சக்திவாய்ந்த அணுமின் நிலையங்கள் உள்ளன. இந்த அணுமின் நிலையங்களையும் உளவு கப்பலால் பார்க்க முடியும் எனவும் சென்னைக்கு அருகே இருக்கும் ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள இஸ்ரோ விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் பணிகளையும் அந்த கப்பலால் ஆய்வு செய்ய முடியும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தல்கள் தவிர விசாகப்பட்டினம் மற்றும் கொச்சியில் உள்ள கடற்படை தளங்களையும் கப்பல் துல்லியமாக தெரிந்து கொள்ள வாய்ப்பு இருப்பதாகவும் இந்த உளவு தகவல்கள் உடனுக்குடன் சீன இராணுவத்துக்கு அனுப்பப்படும் அபாயம் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

கப்பலின் வருகையை தவிர்க்க முடியாமல் உள்ளது என சிறிலங்கா அரசு தெரிவித்திருந்தாலும் இன்று கப்பலுக்கு சீன தூதரகமும், சிறிலங்கா அதிகாரிகளும் உற்சாக வரவேற்பு கொடுத்தமை அமெரிக்க இந்திய தரப்பின் அச்சத்தை மேலும் வலுவாக்கியுள்ளது.

இதன் காரணமாக கப்பல் துறைமுகத்தில் இருக்கும் 7 நாட்களும் அந்த கப்பலின் செயல்பாடுகளை உன்னிப்பாக கவனிக்க இந்தியா ஏற்பாடு செய்திருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.



தமிழ்நாட்டுக்கு வெளியே அதிக
மக்கள் பங்கேற்கும் மாபெரும் தெருவிழா
SULLIVAN
AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
POWERED BY
iConnect Mortgages
SUPPORTED BY
Canada
TORONTO
PROUDLY HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
AUGUST
SAT 27
SUN 28
MARKHAM ROAD
Between
McNicoll & Passmore
FREE ADMISSION
250 000 இற்கும் அதிகமானோர் பங்கேற்கும் நிகழ்வு
தமிழர் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, உணவு மற்றும் வணிகத்தை பறைசாற்றும் நிகழ்வு
கனடிய, ஈழ மற்றும் இந்திய கலைஞர்கள் பங்கேற்கும் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகள்
சிறுவர் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகள்
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
Formula Honda
NISSAN
POWERED BY SPONSOR
iConnect Mortgages
ZONE SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
HIGHER STANDARDS
NAVA WILSON
PRADON SILKS
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING
MEDIA SPONSORS
ATN
east FM 102.7
STARMETROLAND MEDIA
COMMUNITY PARTNER
MARKETING PARTNER
PRINT FAST.ca
tamilfest.ca tamilfest@canadiantamilcongress.ca 416.240.0078

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு
வாங்க..
விற்க..

**Ravi. Paramu**
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



**RANJANI THIRUKESWARAN LAW OFFICE**



- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES


$599* FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

அபாயம்
உண்மையாகலாம்.

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%

Industry critical illness claim breakdown[3]




iA Financial Group

AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

